பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 28 செவ்வாய்க்கிழமை 14.12.2021 கதிர் 39

**இது ரகசியம் அல்ல!**

நாட்டின் நெருக்கடி நிலையால் ராஜபக்ஷக்களுக்கு இடையில் குழப்பம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு திடீர் சுகவீனம், அதனால் திடுதிப்பென சிங்கப் பூருக்கு சிகிச்சைக்கு அவர் பய ணம் என்றெல்லாம் கொழும்பில் பேச்சுகள் பக்கம்02

# ஜனாதிபதியின் செயலர் பதவியிலும் மாற்றம்?

## ஜயசுந்தரவை உடனடியாக நீக்குமாறு கோட்டாவுக்கு அமைச்சர்கள் அழுத்தம்



கொழும்பு, டிசெம்பர் 14

ஜனாதிபதி செயலாளர் பதவியிலிருந்து பி.பி.ஜயசுந்தரவை உட னடியாக நீக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுப்பதற்கு அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர். 10

## கொரோனாவின் மூன்றாம் அலையில் 60 கர்ப்பிணிப் பெண்கள் உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ.14

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றின் மூன்றாவது அலையில் 60 கர்ப்பிணித் தாய் மார்களும், 18 வயதுக்குட்பட்ட 89 சிறுவர்களும் உயிரிழந் துள்ளனர் என்று சுகாதார அதி காரிகள் நேற்று தெரிவித்தனர்.

சுகாதார மேம்பாட்டு பணி யகத்தில் நடைபெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில், சுகாதார அமைச்சின் தாய் மற்றும் சிறு வர் சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் சித்ரமாலி டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

கர்ப்பிணித் தாய்மார்களும் பூஸ்டர் டோஸ் எடுத்துக்கொள் ளலாம் என்றும் அவர் கூறினார்.

## பாலா அண்ணாவின் நினைவேந்தல் இன்று



'தேசத்தின் குரல்' மதியுரை ஞர் கலாநிதி அன்ரன் பால சிங்கத்தின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் நாள் 11

## போதைப்பொருளுடன் யாழில் ஒருவர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.கல்லுண்டாய் பகுதியில் கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் 10



## ஒமிக்ரோன் வைரஸால் உலகில் முதல் மரணம் பிரிட்டனில் பதிவு

கொரோனா ஒமிக்ரோன் வைரஸ் மாறுபாட்டின் தொற்று காரணமாக உலகின் முதல் உயிரிழப்பாக பிரிட்டன் பிரஜை யின் மரணம் பதிவாகியுள்ளது.

இந்நிலையில், ஒமிக்ரோன் அவ்வளவு தீவிரமான மாறுபாடு அல்ல என்ற கருத்தில் இருந்து விலகி இருக்குமாறு பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் மக்க ளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பூஸ்டர் டோஸை விரைவில் எடுக்கவும் பிரிட்டன் பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

## இரு வாரங்களில் பஞ்சம் ஏற்படும்!

### அடித்துக் கூறுகின்றார் விஜயதாஸ



இன்னும் இரு வாரங்களில் அந்நியச் செலாவணி கையி ருப்பு பூஜ்ஜியத்துக்கு வந்து விடும். ஓரிரு வாரங்களில் பஞ்சமும் ஏற்பட்டுவிடும்.

– இவ்வாறு அபாய எச்ச ரிக்கை விடுத்துள்ளார் ஆளுங் கட்சி நாடாளுமன்ற 2

## உதயன் பத்திரிகைக்காக மன்றில் சுமந்திரன் ஆஜர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.14

'உதயன்' பத்திரிகைக்கு எதி ராக அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா தொடுத்த வழக்குகளில் நேற்று பத்திரிகை நிறுவனத்துக் காக நாடாளுமன்ற உறுப்பின ரும் ஜனாதிபதி சட்டத்தரணியு மான எம். ஏ. சுமந்திரன் முன்னி லையானார்.

'உதயன்' பத்திரிகைக்கு எதி ராக அமைச்சர் 10

## யாழில் கொரோனாவால் 3 பிள்ளைகளின் தாய் சாவு

யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுக் குள்ளாகிய 3 பிள்ளைகளின் தாயார் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் – அராலி வீதி யில் வசந்தபுரத்தைச் சேர்ந்த கண்ணன் பத்மலோஜினி (வயது – 38) என்பவரே இவ் வாறு உயிரிழந்துள்ளார்.

6 நாள்களாக காய்ச்சல் இருந்துள்ளது. அவர் தனியார் கிளினிக்கில் மருத்துவ ஆலோ சனையுடன் மாத்திரைகளைப் பெற்றுள்ளார். 2

## 27 பேர் சாவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 27 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் வெளி யிட்டுள்ள 10



தென்னாடு

சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

மார்கழிப் பெருவிழா - 2021

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை மற்றும் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்த திருவருள் கைகூடியுள்ளது.

காலம் - மார்கழித் திங்கள் 10ம் நாள் 11ம் நாள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 25 மற்றும் 26)
இடம் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - சபாலிங்கம் அரங்கம்

தீநுண்மி பெருந்தொற்றுப் பரவல் ஒழுங்குகளால் குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே உள்ளமையால் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் தென்னாடு மடத்தில் முன்பதிவு செய்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 021 221 2739 075 653 3111

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அடிபடுகின்றன.

ஆனால், அவர்களுக்கு நெருங்கிய தரப்புகள் வேறு மாதிரித் தகவல் வெளியிடுகின்றன. ராஜபக்ஷக்களைப் பொறுத்தவரையில் எல்லாமே திட்டமிட்டபடி கனகச்சிதமாக ஒப்பேறுகின்றன என்கின்றன அவை.

நேற்றுக் காலை தமிழ் ஊடக நண்பர் ஒருவர் நேரத்துடன் அழைப்பு எடுத்தார். நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருப்பது பற்றிய தகவலையும், ஜனாதிபதி சிங்கப்பூர் பறந்து விட்டமையையும் தெரிவித்தார். சிவசிவா என்றேன்.

உடனே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமான ஒரு வட்டாரத்துக்கு அழைப்பு எடுத்தேன்.

"உங்கள் பெரியவரிடம்(பிரதமரிடம்) தான் நாட்டின் பொறுப்பு இப்போது?" – என்று கேட்டேன்.

"ஏன் அப்படிக் கேட்கின்றீர்கள்?" – என்று வினாவினார் அவர். ஜனாதிபதி வெளிநாடு புறப்பட்டிருந்தமை அவருக்கும் தெரிந்திருக்கவில்லை.

விடயத்தைச் சொன்னேன். இன்ன நண்பர் கூறினார், அவரின் இணையத்திலும் செய்தி வெளியிட்டிருக்கின்றார் என்று குறிப்பிட்டேன்.

பத்து நிமிடத்தில் மேல் விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக பிரதமருக்கு நெருக்கமான அந்த நண்பருக்கு திருப்பி அழைப்பு எடுத்தேன். அவர் சொன்ன விடயங்கள் ஆச்சரியமாக இருந்தன.

"ஜனாதிபதி நாட்டில் இல்லை என்று பிரதமருக்குத் தகவல் சொன்னேன். தெரியாதவர் போல 'அப்படியா?' என்று கேட்டார். யார் கூறினார்கள் எனவும் வினா வினார். இன்னார் கூறினார், இன்னாரின் இணையத் தளத்தில் செய்தி வெளிவந்திருப்பதாக என்று பதிலளித்தேன். 'அவர்கள் சொன்னால் சரியாகத்தான் இருக்கும்' என்றார் பிரதமர். அவரின் பதிலைப் பார்த் தால் ஜனாதிபதி புறப்பட்டமை அவருக்குக் கூடத் தெரியாத விடயமாக இருக்கலாம். ஆனால் நாளைக்கு சாவகாசமாக 'ஜனாதிபதி தகவல் தந்து விட்டுத்தான் புறப்பட்டார்' எனப் பிரதமர் சிரித்துக் கொண்டு சொன்னாலும் சொல்வார்." – என்றார் அந்த நண்பர்.

எனக்குப் பின்னர் கிடைத்த தகவல்களின்படி, அந்த நண்பர் கடைசியாகக் குறிப்பிட்ட நிலைமைதான் உண்மை.

நாட்டின் நெருக்கடி நிலைமை குறித்து ராஜபக்ஷ சகோதரர்கள் கடந்த எட்டாம் திகதி – புதன்கிழமை – தங்களுக்குள் கூடிப் பேசியிருக்கின்றார்கள்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு உதவ இந்தியா தயார் என்ற தகவல் ராஜபக்ஷக்களை மூச்சு விட வைத்திருக்கின்றது.

அதையடுத்தே, முன்னர், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு சிங்கப்பூரில் தாம் செய்த இருதய சத்திர சிகிச்சையின் தொடர் சிகிச்சை நடவடிக்கைகளுக்காக சிங்கப்பூருக்குச் செல்லும் திட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏனைய சகோதரர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்கு இந்தியா முதுகு கொடுப்பதால் ஏற்பட்ட தற்காலிகத் திருப்தியை அனுபவிப்பதற்காக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் இரண்டொரு நாளில் விடுமுறையில் அமெரிக்கா புறப்படுவார் என்ற தகவலும் சகோதரர்களின் சந்திப்பினிடையே பரிமாறப்பட்டது. கிறிஸ்மஸ் விடுமுறை கழித்துத் தான் அவர் நாடு மீளுவார்.

'யுகதனவி' வலு உற்பத்தி மையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு திடுதிப்பென கைமாற்றிய விடயத்தாலும், அதை ஒட்டிய குழப்பங்களாலும் ஜனாதிபதியும், பிரதமரும் அதிருப்தியுற்றிருக்கின்றனர் என்று தெரிகின்றது. அவசரப்பட்டு வினையைத் தேடி வாங்கிக் கொண்டுள்ளோம் என்பது அவர்கள் கருத்து. எது, எப்படி என்றாலும் விவகாரம் முள்ளில் விழுந்த சேலை போன்றது. அதனால் மிகக் கவனமாகக் கையாள வேண்டும் என்று சகோதர்கள் தீர்மானித்துள்ளார்கள்.

ஒப்பந்த விடயத்தை ரத்துச் செய்யா விட்டால் எதிர்ப்பு அடங்காது. ரத்துச் செய்தால் அமெரிக்கா பொறுக்காது. 'செல்லும் செல்லாதவை எல்லாம் செட்டியார் தலையில் போடுவது போல' இந்த விடயத்தையும் நீதிமன்றம் மூலம் தீர்கக அண்ணன் ராஜபக்ஷக்கள் தீர்மானித்திருக்கின்றார்கள்.

இலங்கை – இந்திய ஒப்பந்த ஏற்பாடுகளின்படி வடக்கு – கிழக்கு இணைந்திருக்க வேண்டும். என்ன செய்தார் மஹிந்தர்? நீதிமன்றம் மூலம் இணைப்பைக் செல்லாததாக்கினார். நான் என்ன செய்ய? நீதிமன்ற உத்தரவை 'நான் மீற முடியாதே...!' – என்று இப்போது கணக்கு – கதை – விடுகின்றார்.

'யுகதனவி' வலு உற்பத்தி மைய விடயத்தையும் அப்படித்தான் கையாள சகோதரர்கள் முடிவு செய்துள்ளனர். அதனால் தான் அந்த ஒப்பந்தத்துக்கு எதிரான வழக்கு விடயத்தில் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறி ஒப்பந்தத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் வாதிடுவதற்கு அமைச்சர்கள் வாசுதேவ, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல ஆகியோருக்கு மூத்த ராஜபக்ஷக்கள் ஆசீர்வாதமும் அனுமதியும் வழங்கியிருக்கின்றார்கள் என்று கூறப்பட்டது. நீதிமன்ற உத்தரவு மூலம் ஒப்பந்தம் இல்லாமலாக்கப்படும். உள்நாட்டில் அந்த ஒப்பந்தத்தை எதிர்க்கும் தரப்புகளுக்கு அது வெற்றி. 'நீதிமன்றம் உத்தரவிட்டு விட்டது. நாங்கள் என்ன செய்ய முடியும்?' என அமெரிக்கத் தரப்புக்கு 'பெப்பே' காட்டும் இலங்கை அரசு. ஒரே கல்லில் பல மாங்காய்கள் விழுத்தும் ஏற்பாடு இது.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் யுகதனவி நிலைய விவகாரம் எடுக்கப்பட இருந்தது. அந்தக் கூட்டத்தில் பிரசன்னமாகி வெளிப்படையாக கருத்துச் சொல்ல விரும்பாத ஜனாதிபதி, அந்த அமைச்சரவைக் கூட்டத்தையும் தவிர்ப்பற்காகவே இச்சமயத்தில் சிங்கப்பூர் மருத்துவ சிகிச்சை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து கொண்டார் எனவும் கூறப்பட்டது.

நேற்றிரவு அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தின் முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் மாநாடு இன்று காலை நடைபெற வேண்டும். ஆனால் அது ரத்துச் செய்யப்பட்டிருப்பருப்பதாக நேற்றிரவு ஒரு தகவல். அது மாத்திரமல்ல, மூத்த அமைச்சர்கள் பலர் இன்று காலை 10 மணிக்கு பிரதமரின் அலரிமாளிகை அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

இன்று காலை அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான சில நடவடிக்கைகளை நேரில் பார்வையிடும் தனது நிகழ்ச்சி நிரலையும் பிரதமர் ரத்துச செய்திருக்கின்றார் எனத் தெரிகின்றது.

யுகதனவி வலு உற்பத்தி நிலைய ஒப்பந்த விவகாரத்தை நீதிமன்றத்தில் கையாள்வது, வரக் கூடிய மாகாண சபைத் தேர்தல் ஆகியவை குறித்து சிரேஷ்ட அமைச்சர்களுடன் பிரதமர் இன்று ஆராயக் கூடும் எனக் கூறப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜயசுந்தரவினால்தான் பல்வேறு குழப்பங்களும் என்று கருதும் அரசின் மூத்த தரப்புகள் சில அவரை அப்பதவியில் இருந்து அகற்ற வேண்டும் எனச் சீறுகின்றன.

மூத்த ராஜபக்ஷக்கள் இருவரும் – சமலும் மஹிந்தவும் – அந்த நிலைப்பாட்டில் என்றும் –

ஆனால் இளைய ராஜபக்ஷக்கள் இருவரும் – கோட்டாவும் பஸிலும் – ஜயசுந்தரவே அப்பதவியில் நீடிக்க வேண்டும் எனும் நிலைப்பாட்டில் என்றும் –

விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பி.பி.ஜயசுந்தர விவகாரமும் இன்று காலை பிரதமர் தலைமையில் சிரேஷ்ட அமைச்சர்கள் கூடும்போது ஆராயப்படும் எனத் தெரிகின்றது.

ராஜபக்ஷக்களில் மூத்தவரான சமல், அண்மையில் பி.பி.ஜயசுந்தரவோடு நேரடியாக வாய்ச்சமரில் ஈடுபட்டார் என்ற தகவலும் உண்டு.

★ ★ ★

தமிழ்ப் பேசும் தரப்புகளை ஒன்றுபடுத்துவது தொடர்பக நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற கூட்டம் தொடர்பான மேல் விவரங்களை நாளை இப்பத்தியில் பார்ப்போம்.

– மின்னல் –

## யாழில் கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அவர் நேற்றுமுன்தினம் மூச்சுத் திணறலுக்குள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு சேர்க்கப்பட்டார்.

எனினும், குடும்பப்பெண் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது. அவரது சடலத்தில் பெறப்பட்ட மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன.

அவருக்குக் கொரோனா நோய்த் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தி நேற்று மாலை பரிசோதனை அறிக்கையிடப்பட்டுள்ளது என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த குடும்பப் பெண் கொரோனாத் தடுப்பூசியின் முழுமையான அளவைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை முன்னெடுத்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. சுகாதார விதிமுறைகளின் அடிப்படையில் சடலம் தகனம் செய்யப்படவுள்ளது.

## இரு வாரங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)ய உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதால் அமைச்சரவையில் உள்ள பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்கள் ஜனாதிபதியின் அடிமைகளே! தனி நபர் ஆட்சிக்காகவே 20 கொண்டுவரப்பட்டது.

அதேவேளை, இன்னும் இரு வாரங்களுக்குள் அந்நியச் செலாவணி பூஜ்ஜிய மட்டத்துக்கு வந்துவிடும். ஓரிரு வாரங்களுக்குள் பஞ்சமும் ஏற்படும். அத்தியாவசியப் பொருள்களைக்கூட விநியோகிக்க முடியாத நிலைமை அரசுக்கு ஏற்படும். குழப்பகரமான சூழ்நிலை உருவாகும் – என்றார்.






# 12 தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர் அக்கரப்பத்தனையில் பணிப்பகிஷ்கரிப்பு

அக்கரப்பத்தனை பெருந்தோட்ட கம்பனிக்கு கீழ் இயங்கும் 12 தோட்டங்களை கொண்ட 42 பிரிவுகளைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள், தொழிலுக்குச் செல்லாமல் நேற்று (திங்கட்கிழமை) காலை முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

தொழிலாளர்களுக்கு வழங்குவதாக வாக்குறுதி வழங்கப்பட்ட ஆயிரம் ரூபா சம்பளம் பாரிய பிரச்சினையாக இருப்பதாகவும் தற்போது தேயிலை மலைகள் காடாகிக் கிடப்பதால் 20 கிலோ கொழுந்து பறிக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் தெரிவித்தே இவர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் வாரத்துக்கு இரண்டு அல்லது மூன்று நாள்களே வேலை வழங்குவதால், பெரும் சிரமத்துக்கு மத்தியில் நிம்மதியற்று வாழ்ந்து வருகின்றோம் எனத் தொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஆகவே பேச்சில் ஈடுபடும் தொழிற்சங்கங்கள், தமக்குச் சாதகமான பதிலைப் பெற்றுத் தருமாறு கோரியும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க, கூட்டு ஒப்பந்தம் கட்டாயமாக வேண்டும் என வலியுறுத்தியும் இந்த பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்தோம் என தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பணிப்பகிஷ்கரிப்பால், தேயிலை தொழிற்சாலைகளும் மூடப்பட்டு, தொழிற்சாலை நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


## University of Jaffna – Sri Lanka
## Faculty of Management Studies and Commerce
## Master of Business Administration
## Intake VI – 2020/2021

The Faculty of Management Studies and Commerce of the University of Jaffna is pleased to announce the commencement of the Master of Business Administration (MBA - Intake VI) - 2020/2021 and invites applications for the admission from qualified candidates. Details of the programme can be obtained from the website of the Faculty of Management Studies and Commerce: **http://www.maco.jfn.ac.lk**

### ELIGIBILITY REQUIREMENTS

A candidate seeking admission to an MBA should possess any one or more of the following qualifications and should demonstrate a satisfactory level of English language proficiency:

i. A degree from a recognized University / Higher Education Institution

**OR**

ii. A Postgraduate Diploma from a recognized University or Higher Education Institution/ Professional Institution with a minimum of one year post qualifying managerial/ relevant experience.

**OR**

iii. At least any one of the following professional qualifications with three years managerial/ relevant experience:

* Chartered institute of marketing (CIM) UK
* Associate member of Chartered Institute of Bankers (ACIB) UK
* Associate member of Chartered Institute of Bankers (AIB) Sri Lanka
* Chartered Institute of Management Accountants (CIMA)
* Chartered Institute of Personnel and Development (CIPD)
* Association of Chartered & Certified Accountants (ACCA)
* Chartered Accountants (CA) Sri Lanka
* Certified Management Accountant (CMA) Sri Lanka
* nstitute of Engineers (CIE) UK/Sri Lanka
* Institute of Chartered Secretaries and Administrators
* At least a three year Higher National Diploma in Accountancy/ Management/ Marketing obtained from Ceylon Technical College/ Advanced Technical Institute/ Advanced Technological Institute, Sri Lanka, etc.
* Attorney – at – Law

**OR**

iv. Any other academic/professional qualification(s) obtained from a recognized University/ Institute with a minimum of three years of post qualifying experience acceptable to the Board of study and the Senate of the University of Jaffna.

### PROGRAMME STRUCTURE

Duration - Two years (Four (04) Semesters)
Medium of instruction - English

Application Fees : **Rs 2,000**

### COURSE FEE

Total course fee for the MBA programme is LKR Four Hundred Thousand (LKR 400,000.00). This can be paid in two installments as given below:

First Year : **Rs 230,000**
Second Year : **Rs 170,000**

**The closing date for application: 10.01.2022.**

### APPLICATION PROCEDURE

Online application form, procedure and sample paying-in-voucher are available on the website http://www.maco.jfn.ac.lk
Further information could be obtained through **021 221 6394 / 021 222 3610** and the above website.

**Registrar**
**University of Jaffna, Sri Lanka**


# பங்காளிகளுடன் கலந்துரையாடி அரசு எந்தவித முடிவுகளையும் எடுப்பதில்லை!

## திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு



நடைமுறை அரசாங்கம் பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடி எந்தவித முடிவுகளையும் எடுப்பதில்லை என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ விதாரண குற்றம் சுமத்தியுள்ளார்.

தலவாக்கலை, அக்கரபத்தனை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

'மஹிந்த ராஜபக்ஷ ஜனாதியாக இருந்த போது எம்முடன் கலந்துரையாடி சில தீர்மானங்களை எடுத்தார். ஆனால் அவ்வாறான நடைமுறையை நடப்பு அரசாங்கத்தில் காண முடியவில்லை. அதனால் அரசாங்கத்தில் உள்ள குறைபாடுகளை எமக்குச் சுட்டிக்காட்ட முடியாமல் உள்ளது.

தற்போதைய நிலையில் நாட்டின் பொருளாதாரம் சரிவை நோக்கிப் பயணிக்கின்றது. அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றத்தால் மக்கள் சிரமப்படுகின்றனர் இவ்வாறான பல பிரச்சினைகள் உள்ளன.

இவை தொடர்பில் கதைக்க எமக்குச் சந்தர்ப்பமில்லாமல் உள்ளது. எனக்கு உறுதியளித்தபடி அமைச்சரவையில் எனக்கு எந்தவிதப் பொறுப்பும் வழங்கப்படவில்லை. நான் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமே. ஆகவே, அமைச்சரவையில் எடுக்கும் முடிவுகளுக்கு ஆலோசனை வழங்கவும் முடியாதுள்ளது.

மக்கள் சிரமத்துக்குள் விழுவதைத் தடுக்க என்னிடம் பல யோசனைகள் உள்ளன. கொவிட் சமூகத்தில் பரவலடையும் போது அதனைத் தடுக்க பிரத்தியேக வேலைத்திட்டம் ஒன்றை அமுலாக்க வேண்டும். அது தொடர்பான எனது ஆலோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனது ஆலோசனைகள் ஏற்கப்பட்டிருக்குமானால் நிலைமை கடினமாய் இருந்திருக்காது. – என்றார்.

# ரஞ்சனை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி ஐரோப்பாவிலுள்ள இலங்கையர் போராட்டம்

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல நடிகருமான ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யக் கோரி, ஐரோப்பாவில் வாழும் இலங்கையர்கள் குழுவொன்று ஜெனிவாவில் அமைதியான முறையில் போராட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு முன்பாக இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதில் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த இலங்கையர்கள் பலர் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


## FACULTY OF TECHNOLOGY, UNIVERSITY OF JAFFNA
## WALK – IN – INTERVIEW

Walk in Interview for appointments to the following posts will be held on **28.12.2021**at **9.30a.m** at the **Board Room of Faculty of Agriculture, KilinochchiPremises, University of Jaffna.**

* Temporary Assistant Lecturer / Temporary Demonstratorin **Engineering Technology:** Construction Technology/Electro Technology/Automobile Technology
* Temporary Assistant Lecturer / Temporary Demonstratorin **Biosystems Technology:** Food Production Technology/Commercial Green Farming Technology
* Temporary Assistant Lecturer / Temporary Demonstratorin **Interdisciplinary Studies:** Information and Communication Technology/Physics/Mathematics/ Statistics /related fields

**For detailed information on qualifications and salary, please refer to www.jfn.ac.lk.**

**Registrar,**
**University of Jaffna.**
**13.12.2021.**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தேவை; தேசத்தின் குரல்!

'தேசத்தின் குரல்' அன்டன் பாலசிங்கத்தின் பதினைந்தாவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

அவரின் மறைவையொட்டி அவருக்கு தலைவர் பிரபாகரன் வழங்கிய கௌரவம்தான் 'தேசத்தின் குரல்' என்ற பட்டம். அது, ஆழ்ந்த, அர்த்தமுள்ள கௌரவம். தமிழர் தேசத்தின் குரலாகவே ஒலித்தவர் பாலசிங்கம்.

அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் தலைவர் பிரபாகரனுக்கும் மதியுரைஞர். தத்துவாசிரியர்.

ஆனால், கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக – இலங்கைத் தீவில் தமிழர் தேசம் தனது இறைமையை அந்நிய ஆதிக்க சக்திகளிடமும், தொடர்ந்து பௌத்த, சிங்களப் பேரினவாதத்திடமும் பறிகொடுத்த பின்னர் – தமிழர் தேசத்தின் இராஜதந்திரியாக உலகெங்கும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பல தரப்பினருடனும் இராஜதந்திரத் தொடர்பாடல்களில் ஈடுபட்ட ஒரே இராஜதந்திரி அவரே. அவர் மட்டுமே.

தமிழர் தேசத்தின் நிலைப்பாட்டை – கருத்தியலை – விடுதலைப் போராட்ட நியாயத்தை – தமிழர்களின் நீதியான அபிலாஷைகளை – தமிழர் தேசப் பிரதிநிதியாக உலகெங்கும் எடுத்துச் சென்ற ஒரேயொரு இராஜதந்திரியை, தமிழர் தேசத்தின் உள்ளக்கிடக்கையை உலகெங்கும் ஓங்கி ஒலித்தவரை, 'தேசத்தின் குரல்' என்று விளிப்பது முற்றிலும் பொருத்தமானதல்லவா?

அவர் ஒரு சீரிய சிந்தனையாளர். தமது ஆங்கிலப் புலமை மூலம் உலகைத் துருவித் துருவித் தேடினார். உலக வரலாறுகளை ஐயம்திரிபற வாசித்தறிந்தார். தத்துவக் கோட்பாடுகளைத் கரைத்துக் குடித்தார். மத, மார்க்க, தத்துவ, சிந்தனைப் போக்குகளைக் கற்றறிந்தார். மனித வாழ்வியல் கோலங்களைக் கண்டு தரிசித்து, நுணுகி ஆராய்ந்து தேர்ந்தார்.

அவரை ஓர் அரசியல் வழிகாட்டியாக – மதிநுட்பம் மிக்க இராஜதந்திரியாக – பேச்சு மேசையில் நுட்பமாக அரசியல் களமாடும் சாணக்கியராக – தமிழர் தேசம் கண்டது.

ஆனால், அதை எல்லாம் தாண்டி அவர் ஒரு சிறந்த தத்துவாசிரியர். தத்துவ விசாரணைகளில் – சித்தாந்த விசாரங்களில், மூழ்கி உயர்ந்த தத்துவ முத்துக்களை வெளிக்கொணர்ந்தவர். புராட்டோ, அரிஸ்டாட்டிலில் இருந்து ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி வரை பல தத்துவவியலாளர்களின் கருத்துக்களை வாசித்தறிந்து, கரைத்துக் குடித்தவர். கம்யூனிஸக் கோட்பாடுகளிலிருந்து முதலாளிய மேலாண்மை வரை ஆழமாக வாசித்து, தரிசித்து, அறிந்தவர். அவற்றை எளிமையான தமிழில் பாரமரர்களும் புரியும் வண்ணம் எழுத்தில் வடிக்கும் ஆற்றல் மிகப் பெற்றவர்.

அறிவார்ந்த ஆங்கிலமும், அழகு தமிழும் அவர் பேனாவில் மணிப் பிரவாகமாகப் பெருக்கெடுத்தன.

தலைவர் பிரபாகரனின் வரலாற்றுப் பெருமை மிக்க மாவீரர் தின உரைகளுக்கு 2005 வரை வடிவம் கொடுத்த சிற்பி அவர்தான். தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சொட்டான கருத்துத் தெறிப்பைத் தரும் அந்த உரைகளை தேர்ந்த புலமையாளரான – சிந்தனையாளரான – அவரால்தான் வடிக்க முடிந்தது.

உலக நடப்புகள், சர்வதேசப் போக்குகள், தேசங்களுக்கு இடையிலான உறவாடல்கள் பற்றிய ஆழமான அறிவு மட்டுமல்லாமல், தீர்க்கதரிசனம் கொண்டவராகவும் அவர் விளங்கினார். அந்தத் தீர்க்கதரிசனத் தெளிவை – கூர்மையான ஞானப் பார்வையை – தமிழர் தேசம் சரிவரப் புரிந்து, உள்வாங்கித் தன்னை நெறிப்படுத்திக் கொள்ளாதமையால் வந்த நிலைமைதான் இன்றைய நமது அலங்கோலத்துக்குக் காரணம்.

முடங்கிப் போய்க் கிடக்கும் தமிழரின் தேச விடுதலைப் போராட்டத் தேரை முன் நகர்த்துவதற்கு அஹிம்சையில் புடம் போட்ட தியாகி திலீபன் போன்ற அறப்போர் வீரர்களும், சர்வதேசங்களைக் கட்டிக் கையாளும் இராஜதந்திரம் மிக்க பாலசிங்கம் போன்ற அரசியல் வழிகாட்டிகளுமே இன்றைய நமது தேவை.

வரலாற்றைப் படைப்போர், நினைத்த கணத்தில் வந்து விடுவதில்லையே. அதுதான் நம் துரதிர்ஷ்டம்.

# மட்டக்களப்பில் வீதிகளையும் ஊடறுத்துப் பாயும் வெள்ளம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் பலத்த மழை காரணமாக பல வீதிகளை ஊடறுத்து வெள்ளநீர் பாய்வதால் உள்ளூர் போக்குவரத்துக்களும் தடைப்பட்டுள்ளதுடன், சிறிய குளங்களும் நிரம்பி வழிவதுடன் பெரிய குளங்களின் நீர் மட்டமும் உயர்ந்துள்ளன.

மாவட்டத்தின் படுவாங்கரைப் பிரதேசத்தின் போரதீவுப்பற்றுப் பிரதேசத்திற்குட்பட்ட மண்டூர் – வெல்லாவெளி பிரதான வீதி, நாணமடு - மாலையர்கட்டு பிரதான வீதி, நாணமடு - 16 ஆம் கிராமம் பிரதான வீதி, ஆனைகட்டியவெளி - சமிளையடி வீதி, உள்ளிட்ட பல வீதிகளை ஊடறுத்து வெள்ள நீர் பாய்ந்து வருவதால் அந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றமையுடன், அப்பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களும், இதன் காரணமாக பயணம் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் திங்கட்கிழமை காலை 8.30 மணி வரையில் 24 மணித்தியாலங்களில் 78.1 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி சு.ரமேஷ் தெரிவித்தார்.

எனினும், 32அடி கொள்ளளவுடைய நவகிரிக் குளத்தின் நீர் மட்டம் தற்போது 22 அடி 5அங்குலமாகவும், 17கொள்ளளவுடைய தும்பங்கேணிக் குளத்தின் நீர்மட்டம் தற்போது 14அடி ஆகவும் உயர்ந்துள்ளது.

அதுபோன்று 33அடி கொள்ளளவுடைய உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டம் தற்போது 27அடி 7அங்குல மாகவும், 15அடி 8அங்குலம் கொள்ளளவு டைய உறுகாமம் குளத்தின் நீர்மட்டம் தற்போது 13அடி 3அங்குலமாகவும், 19அடி 2அங்குலம் கொள்ளளவுடைய வாகனேரிக் குளத்தின் நீர்மட்டம் தற்போது 16அடி 9அங்குலமாகவும், 11அடி 6அங் குலம் கொள்ளளவுடைய கட்டுமுறிவுக் குளத்தின் நீர்மட்டம் தற்போது 10அடி 6அங்குலமாகவும், 12அடி கொள்ளளவுடைய கித்துள்வெள குளத்தின் நீர்மட்டம் தற்போது 6அடி 3அங்குலமாக வும், 15அடி 5அங்குலம் கொள்ளளவுடைய வெலிக்காக்கண்டிய குளத்தின் நீர்மட்டம் தற்போது 14அடி 5 அங்குலமாகவும், புணாணை அணைக்கட்டின் நீர்மட்டம் தற்போது 7அடி ஓர் அங்குலமாகவும் உயர்ந்துள்ளதாகவும் அந்தக் குளங் களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள களுகல் ஓயாவின் 2 வான்கதவுகள் 4 அங்குலம் அளவில் திறக்கப்பட்டுள்ளமையுடன், அதிலிருந்து வெளியேறும் நீர் நவகரிக் குளத்திற்கு வந்து சேர்வதாகவும், பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# எதிர்வரும் ஏப்ரல் மாதம் அளவில் நாடு அதளபாதாளத்திற்குள் விழும்

## நளின் பண்டார ஆரூடம்



எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் நாடு அதளபாதாளத்திற்குள் விழும் நிலை உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படுமானால் அதற்குத் தற்போதைய அரசாங்கம் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

நுவரெலியா - வலப்பனையில் விவசாயிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், சரியான விவசாய ஆலோசனைகளை வழங்க முடியாதவர்களே ஜனாதிபதியுடன் உள்ளனர். சேதன பசளை பாவனைக்கு நாம் எதிரானவர்கள் அல்லர். ஆனால் இது நடைமுறைப்படுத்தப்பட்ட முறையே தவறானது என்கிறோம்.

தற்போது அவர்கள் இது தொடர்பில் பிறப்பித்த வர்த்தமானி முன்பு போல் வாபஸ் பெறப்பட்டுள்ளது. எனினும் பெரும்போகச் செய்கை தற்போதைய நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது.

அப்படியானால் நெல் உற்பத்தியாளர்களின் பொருளாதாரம் பூச்சியமாக மாறும். மரக்கறி உற்பத்தியும் அப்படிதான். விளைச்சல் குறைவடைந்ததன் காரணமாகவே மரக்கறிகளின் விலை உயர்ந்துள்ளது. தேயிலை உற்பத்தியும் அவ்வாறுதான். எமது தேயிலை வெளிநாடுகளுக்கே அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

எனவே இவர்களின் செயற்பாடுகளால் தேயிலை உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஜனாதிபதியுடன் இருக்கும் ஒரு சில மனநலம் குன்றியவர்களின் ஆலோசனைகளே காரணம்.

எனவே, எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் நாட்டில் உணவு தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஆகவே, எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் தற்போதைய அரசாங்கம் வெடித்துச் சிதறும் என்பதே உண்மை. – என்றார்.

# ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு கிளிநொச்சிக்கு நேற்று விஜயமானது

காணாமல் போனோர் தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்கள் ஆகியவற்றின் கண்டுபிடிப்புக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று (திங்கட்கிழமை) கிளிநொச்சி விஜயம் மேற்கொண்டிருந்தது.

இந்த விஜயத்தின் போது ஆணைக்குழு காணாமல் போனோரின் குடும்பங்களை சந்தித்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

குறித்த குழுவின் தலைவர் நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் தலைமையில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் சந்ரா பெர்னாண்டோ, முன்னாள் அரச அதிபர் நிமல் அபேசிங்க, லோகேஸ்வரி பத்மராஜா ஆகியோர் உள்ளடக்கிய ஆணைக்குழு உறுப்பினர்கள் இதன் போது பிரசன்னமாகியிருந்தனர்.

நேற்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து காணாமல் போனவர்களின் உறவுகள் இந்த ஆணைக்குழுவினரை சந்தித்து காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர்.

குறித்த முறைப்பாடுகளை ஆணைக்குழுவினர் மக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் தமிழில் கேட்டறிந்து பதிவு செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



## மக்களைப் பட்டினியில் வைக்கப்போவதில்லை தானே பொறுப்பு என்கிறார் அமைச்சர் பந்துல

அத்தியாவசியப் பொருள்களைத் தட்டுப்பாடு இல்லாமல் விநியோகிக்கும் பொறுப்பை தான் ஏற்றுக்கொள்கிறேன் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால் அவை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் என்றும் ஒருபோதும் மக்களை பட்டினியில் வைக்கப்போவதில்லை என்றும் அவர் உறுதியளித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், ஒரு கிலோ அரிசியின் விலையை 300 ஆக உயர்த்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன என அவர் கூறினார்.

இருப்பினும் அந்தத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டன எனத் தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன, தற்போது ஒரு கிலோ நாட்டு அரிசி 99.50 ரூபாவுக்கு விற்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

# மன்னார் கடலில் காணாமல்போன மீனவர்களில் ஒருவர் சடலமாக மீட்பு



மன்னார் - கோந்தைப்பிட்டி கடற்பரப்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள், கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் காணாமல்போன நிலையில், நேற்றுக் காலை ஒரு மீனவர் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டவர் யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச் சேர்ந்த தர்ஷன் (வயது -19) எனத் தெரியவந்துள்ளது.

மேலும் அதே இடத்தைச் சேர்ந்த செந்தூரன் (வயது - 28) என்கின்ற இரண்டு பிள்ளையின் தந்தையான இளம் குடும்பஸ்தர் காணாமல் போயுள்ளார். அவரைத் தேடும் நடவடிக்கையில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஞாயிறு மதியம் மூன்று மீனவர்கள் கோந்தைபிட்டி கடலில் தமது படகை செலுத்தி, தொழிலுக்குச் செல்ல சரி பார்த்துள்ளனர். இதில் மூன்று மீனவர்கள் உள்ளடங்களாக 8 பேர் படகில் இருந்துள்ளனர்.

அதாவது படகில் வெளி இணைப்பு இயந்திரத்தை இணைத்து படகை செலுத்தி பார்த்துள்ளனர். இதன் போது படகின் வெளி இணைப்பு இயந்திரம் திடீரென இயங்காத நிலையில் காணப்பட்டுள்ளது.

மேலும் காற்றின் காரணமாக படகு கடலில் சென்று கொண்டிருந்தது. இதன்போது படகின் முன் அணியத்தில் நின்ற ஒருவர் திடீரென கடலில் வீழ்ந்து, கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் மற்றைய மீனவர் அவரை காப்பாற்ற கடலில் குதித்துள்ளார்.

ஆனாலும், குறித்த மீனவரும் கடல் நீரில் இழுத்துச் செல்லப்பட்டபோது, ஏனையவர்கள் போராடியும் குறித்த இருவரையும் மீட்க முடியவில்லை. நீண்ட நேரத்தின் பின்னர் மேற்பட்ட படகின் வெளி இணைப்பு இயந்திரம் இயங்கிய நிலையில் இவர்கள் கரை திரும்பி ஏனைய மீனவர்களின் உதவியுடன் தேடியுள்ளனர்.

அந்தவகையில் ஞாயிறு இரவு வரை மீனவர்கள் மீட்கப்படவில்லை. இந்நிலையில் நேற்றுக் காலை முதல் மீனவர்கள் கடலில் தேடுதல் மேற்கொண்டனர்.

இதன்போது கோந்தைபிட்டி கடலில் இருந்து சற்று தொலைவில் தர்ஷன் (வயது - 19) என்பவர் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார். அவரது சடலம் மீனவர்களால் மீட்கப்பட்டு, கோந்தைப்பிட்டி கடற்கரைக்குக் கொண்டு வரப்பட்டது. இத்தகைய நிலையில் ஏனைய மீனவரை மீனவர்கள் தேடி வருகின்றமையுடன் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




## உரக் கலன்கள் வெடிப்புச் சம்பவத்தை பெரிதுபடுத்துவதில் நியாயமில்லையாம்!

### அமைச்சர் மஹிந்தானந்த இப்படிக் கருத்து

*8 லட்சம் விவசாயிகளுக்கு தரமான உரம் வழங்கப்பட்ட நிலையில் நான்கைந்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட திரவ உரக் கலன்கள் வெடித்துச் சிதறின என மாத்திரம் பேசுவதில் நியாயமில்லை என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.*

*கமநல சேவை நிலையங்களின் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட திரவ உரக் கலன்கள் வெடித்து சிதறிய சம்பவங்கள் பல இடங்களில் பதிவாகியிருந்தன.*

*நான்கைந்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட திரவ உரக் கலன்கள் அதிக நைதரசன் செயற்பாடு காரணமாக வெடித்துச் சிதறியுள்ளன என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறினார்.*

*இவ்வாறு வெடித்த திரவ உரம் துர்நாற்றம் வீசுவதாகவும், மீன் கழிவுகளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டது போல் இருப்பதாகவும் விவசாயிகள் குற்றம் சாட்டினர்.*

*மீன் சார்ந்த உரத்தை விவசாயிகள் நீண்டகாலமாகப் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் இது நல்ல நைதரசன் உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.*

*எவ்வாறாயினும் வெடித்ததாகக் கூறப்படும் உரம் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என இதுவரை விவசாய அமைச்சு அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



- செல்லத்துரை ரவீந்திரன் -


அங்கம் - 220

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**567. ஏன் அப்படியான கணிப்பு?**

போரின் முடிவில் தமிழ் மக்களுக்கு தென்றல் வரவில்லை. அவர்கள் வசந்தத்தையும் காணவில்லை. புயல்தான் வீசியது. அதைத்தான் தாக்குப் பிடிக்க ஓடி ஓடிப் பாதுகாப்புத் தேடினார்கள்.

அந்தப் புயலில் சிலைகள் செதுக்கக் கூடிய கற்பாறைகளோ, வேம்பு, தேக்கு போன்ற மரங்களோ சாயவில்லை. தென்னையும்கமுகும்முறிந்த மரக்கிளைகளும் குப்பையும் கூழமும்தான் மேலெழும்பி உயரப் பறந்தன. தங்கள் அவஸ்தைகளால் மக்கள் அவற்றை பொறுக்கினார்கள். இன்று அவதிப்படுகிறார்கள்.



பண்டா - செல்வா உடன்பாட்டின்போது

"தமிழ் மக்களுக்கு 1978க்கு முன் எந்த வன்முறைச் சம்பவங்களும் இடம் பெறவில்லை. நாங்கள் பொருளாதார மேம்பாட்டுக்காக இணைந்து செயல்பட வேண்டும்" என சாணக்கியன் ஆங்கில ஊடக செவ்வியில் சொன்னார் எனச் செய்திகள். அப்படியானால் 1978 இன் பின் நடத்தப்பட்ட வன்முறை கள், விடுதலைப் போராளிகளின், பின் விடுதலைப்புலிகளின், போராட்டங்கள் தமிழ் மக்கள் தங்கள் மேலேயே திணித்து கொண்டவை என்ற அபிப்பிராயத்தை நிலை நிறுத்துகிறாரா?

இளவயதில் தான் ராஜபக்ஷக்களுடன் சேர்ந்து இயங்கியமை கிழக்கின் மேம்பாட்டுக்காகத்தான், சிறிய வயது, அறிவுப் பற்றாக்குறை, ஆனால் அவற்றை விளங்கி, இப்பொழுது மாறினேன் என்கிறார். அந்த மாற்றம் எந்தக் கட்சியின் மூலம் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை பெற்று விடலாம் என்பதிலா?

கட்டமைக்கப்பட்ட வன்முறைகளுக்கும் (சுதந்திரத்துக்கு பின் நடந்தவை) நேரடியான உடல் ரீதியான வன்முறைக்கும் உள்ள வித்தியாசத்தை சாணக்கியன் படித்தும் புரியாமலிருந்திருக்கலாம். சிறுவனாக கண்டியில் சிங்கள பகுதியில் படித்தமையால் அவரை அவை பாதிக்காமல் விட்டிருக்கலாம். ஆனாலும் தமிழரசுக்கட்சியின் அங்கத்தவராக அங்கு நியமனம் பெற்று, தமிழ் மக்களின் பிரதிநிதியானவர் கடைசி தமிழரசு கட்சியின் வெள்ளிவிழா மலரை படித்திருந்தாலாவது 1978 இன் முன் (கட்டமைக்கப்பட்ட வன்முறையை விட்டாலும்) உடல் ரீதியான வன்முறைகளைத் தெரிந்திருக்கலாம். அந்த வருடங்களில் அவரது பேரனார் இராசமாணிக்கம் தமிழரசின் தலைவராகப் பல வருடங்கள் இருந்தவர். நேரடியாக இவற்றைக் கண்டவர். தனயன்கள் பேரன்களிடமிருந்துதான் பலவற்றைத் தெரிந்து கொள்வார்கள். இவர் இளவயதில் ராஜபக்ஷக்களிடம் கேட்டது மனதில் பதிந்திருக்கலாம்.

சுமந்திரனே போரின் பின்னால் அரசியலுக்கு வந்துதான் விடுதலைப்புலிகளின் வன்முறையை ஆதரிக்கவில்லை எனச்


உடன்பாட்டுக்கு எதிரான ஜே.ஆரின் கண்டி யாத்திரை

சொல்பவர். விடுதலை போராளி கப்டன் பண்டிதனுக்கு மரியாதை செலுத்தியது அவர் தரப்புதன்னுடைய வழக்காளியான தால் என்கிறார். அது அவரது தனிப்பட்ட கருத்துக்கள். அவர் இலங்கை முழுவதும் தீவுப் பகுதிகளிலிருந்து அம்பாந்தோட்டை ஈறாக வாழும் ஒரு கிறிஸ்தவ பங்கின் (மெதடிஸ்ட்) உப தலைவர். ஆகவே அவர் ஸ்ரீலங்காவின் உரிமைப் போராட்டங்களை அந்தக் கண் கொண்டும் இணக்க ரீதியில் பார்க்கிறார்.

**568. புதியவை ஏதாவது சர்வதேச மாற்றங்களையும், மனித உரிமை பற்றிய உலகின் போக்கையும் ஒட்டி ஏற்படுத்துவது நல்லதுதானே?**

மாறும் நியதிகளின் தாக்கங்களை ஏற்றுத்தான் புதியவை ஏதும் ஆக்கப்பட வேண்டும். அவற்றுக்கு காலங்களும் இருக்க வேண்டும்.

ஆனால் நியதிகளில் சில அடிப்படையானவை. அவை பாரிய மாற்றங்கள் காண்பதில்லை. காலத்திற்கேற்ப அவற்றின் தன்மைகள் மாறலாம்.

சமஷ்டி என்பதின் அடிப்படை மாறுவதில்லை. பல நாடுகளிலே அங்குள்ள மக்களின் இயல்புக்கு ஏற்ப அவர்களின் இயல்பில் சமஷ்டி அரசியல்கள் வெற்றிகரமாக நடத்தப்படுகின்றன. சமஷ்டி என்ற வார்த்தையே அரசமைப்புச் சட்டத்தில் இல்லாமல் இந்தியா மாநிலங்களாக இயங்குகிறது. அமெரிக்கா, சுவிற்ஸர்லாந்து, நோர்வே, சுவீடன், கனடா, ஜேர்மனி போன்ற எத்தனையோ நாடுகளில் அப்படியான தன்மைகளில் சமஷ்டி இயங்குகிறது. இன்னுமொரு கோணத்தில் பிரித்தானியாகூட அயர்லாந்து, ஸ்கொட்லாந்துடன் அப்படியான மிகக் கூடிய அதிகாரங்களை தந்து இயங்குகின்றது.

இப்படியான சமஷ்டி அமைப்புகளின் தன்மைகளெல்லாம் எப்படி ஸ்ரீலங்காவிற்கு பொருந்தி வரலாம் என இந்த 70 வருட காலங்களில் ஆராயப்பட்டுள்ளது. ஆனால் இங்கு ஒரு கிஞ்சித்தேனும் தருவதற்கு விருப்பம் இல்லாதுதான் பிரச்சினைக்குக் காரணம். அரசுகள் மாற மாற, அவர்கள் தமிழ் அரசியல் கட்சிகளிலிருந்து தீர்வுக்காக சமர்ப்பணங்கள் கேட்பது வழக்கம். இப்பொழுது உருவாக்க நினைக்கும் அரசமைப்புக்கும் அப்படியானவை கொடுத்திருக்கிறார்கள்.

கலாநிதி பஸ்தியாம்பிள்ளை ஒருமுறை அரசியல் கட்சிகள் ஓடி ஓடி அபிப்பிராயம் கேட்ட போது அவர்களுக்கு சொன்னார் முதல் பக்கத்தில் "விருப்பமிருந்தால் வழியிருக்கும். (If there is a will, there is a way) என்று மாத்திரம் எழுதிவிட்டு, 1956 இருந்து வந்த பண்டா - செல்வநாயகம், டட்லி - செல்வநாயகம், வைத்திலிங்கம் - கெனமன், சந்திரிகாவின் ஏற்பாடு என எல்லாவற்றையும் இணைத்து நீங்களே பாருங்கள். எது விருப்பமோ அதைச் சொல்லுங்கள். பேசுவோம்." என்று கேட்க சொன்னார்.

ஆகவே சமஷ்டிக்கு புது விளக்கம் என்ற ஒன்று சர்வதேச மாற்றங்களாலோ மனித உரிமைகள் பற்றி உலகின் போக்கினாலோ சடுதியாக ஏற்பட்டு விடவில்லை. இருக்கின்ற சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு மேலாக இந்த ஆண்டோ, அடுத்த ஆண்டோ புதிய சட்டங்கள் ஆக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. பாரிய மனித உரிமைகள் மீறப்படும் போது ஐ.நாவின் கட்டமைப்புக்கள் முன்னைப் போலில்லாமல், உடனடி நடவடிக்கை எடுக்கக்கூடிய சில நடைமுறைகளில் மாற்றங்கள் கொண்டு வரவே சிந்திக்கப்படுகின்றன.


உடன்பாடு சமயம் தந்தை செல்வா அருகில் தலைவர் இராசமாணிக்கம்

இருக்கின்ற ஐ.நாவின் அமைப்பு விதிகளிலோ அதன் கட்டமைப்புக்களிலோ அதிகாரங்களிலோ ஏதாவது மாற்றங்கள் ஆண்டுக் காலங்களுக்கு வரப்போவதில்லை. அது வல்லரசுகளால் கட்டுப்படுத்தப்படுவது. மாறப்போவதில்லை.

ஆனால் தமிழ் மக்கள் மூச்சுத்திணறல் நிலையில் இருந்து வெளியேற உடனடி உதவி வேண்டும். நிலாக் காலங்களை பேசிக் கொண்டிருக்க நேரமில்லை. போரின் பின் நடந்த சுவிற்சர்லாந்து கூட்டத்திலிருந்து சம்பந்தனே தமிழ் பரப்புக்களை - தேசிய நோக்கத்தை கொண்டவர்களையாவது - இணைத்திருக்கலாம். அது கூட இன்று பல கூறுகளாகப் பிரிந்து நிற்கிறது.

**569. தமிழ் மக்களுக்கு அவசியமானவை எவை? உரிமைகளா? அவற்றிற்கான சட்டங்களா?**

உரிமைகளைப் பாதுகாக்க சட்டங்கள் வேண்டும். அவற்றை நடைமுறைப்படுத்துகின்ற மனங்களும் வேண்டும். தமிழ் மக்களின் வளங்கள், சிங்கள பெரும்பான்மைப் பகுதிகளில் இணைந்து கிடந்தவை அழிக்கப்பட்டாயிற்று. அவர்களின் பிரதேசங்களிலிருந்த வளங்கள் இப்போது ஆக்கிரமிக்கப்படுகின்றன.

தமிழர்களுக்கு அவசியமானவை அவர்களது பிரதேசங்களும் அவர்களது பாதுகாப்பும்தான். அவை உறுதிப்படுத்தப்படக் கூடிய வழிகளைத்தான் அவர்கள் உடனடியாக அணுக வேண்டும்.

இவற்றினை தற்சமயத்துக்கு விவரிக்காமல் இந்த வருட சர்வதேச உரிமைகள் தினத்தில் கேட்டவற்றைச் சொல்கிறேன்.


சாணக்கியனின் பேரனார் இராசமாணிக்கம்

(வளரும்...)

# பொறுப்பற்ற ஆட்சியாளர்களால் முழு நாடுமே அபாயத்துக்குள்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் காட்டம்



பொறுப்பற்ற ஆட்சியாளர்களால் முழு நாடும் அபாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவித்த அவர் -

தற்போதைய அரசாங்கம், தமக்கு சாதகமான தீர்மானங்களை கொண்டு வந்து நாட்டை மோசமான நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. இதேவேளை நாட்டில் கொரோனா மரணங்கள் நாளாந்தம் பதிவாகின்றன. ஆனால் இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையையும் அரசாங்கம் எடுக்காதமையால் தற்போது கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்தை அண்மித்துள்ளன என அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

இதற்கிடையில் சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவங்கள் 620 இற்கும் அதிகமாக பதிவானபோதும் கூட உரிய விசாரணைகளை முன்னெடுக்க அரசாங்கம் தவறியுள்ளது என சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார்.

அந்தவகையில் தற்போது இலங்கை ஏல விற்பனை பூமியாக மாற்றப்பட்டுள்ளது. வெளிநாட்டவர்களுக்கும் நட்புறவு கொண்டாடும் கும்பலுக்கும் நாட்டின் தேசிய வளத்தை தாரைவார்த்து கொண்டிருக்கும் தறுவாயில் அமைச்சரவை வெறும் சமிக்ஞை தூணாக மாறியுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அரசியல் தலைவர்கள் கூறுவனவற்றுக்கு ‘ஆமென் ஆமென்’ எனக் கூற முடியாது!

## கொழும்பு பேராயர் சாட்டை



அரசியல் தலைவர்கள் கூறும் அனைத்துக்கும் ‘ஆமென் ஆமென்’ எனக் கூற முடியாது என கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாக ஆராய்ந்த ஆணைக்குழு மற்றும் அதன் அறிக்கை ஒரு கேலிக்கூத்து போன்றது எனவும் அவர் விமர்சித்தார்.

கனேமுல்ல பொல்லாத்த தேவாலய பெருவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

மதத் தலைவர்கள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சுயாதீனமாக இருக்க வேண்டும் என்றும் மதத் தலைவர்கள் சுயாதீனத் தன்மையை அரசியல் நன்மைக்காகப் பயன்படுத்தினால் வெட்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அரசியல் தலைவர்கள் கூறும் அனைத்துக்கும் ‘ஆமென் ஆமென்’ எனக் கூற முடியாது எனவும் தெரிவித்தார்.

இன்று மக்கள் நிர்க்கதியாகியுள்ளமைக்கு அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி மதத் தலைவர்களும் காரணமென சுட்டிக்காட்டிய பேராயர், இந்த நாடு மத நாடென்றும் குறிப்பிட்டார்.

இதேநேரம், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக இதுவரையில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்றும் அவர் தெரிவித்தார். அத்தோடு, தாக்குதலின் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகள் இன்னும் தலைமறைவாக உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஆணைக் குழுவால் தொகுக்கப்பட்ட அறிக்கையில் அவர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ள போதிலும் அவர்கள் இதுவரையில் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# இரண்டு பிள்ளைகளின் தந்தை மட்டக்களப்பில் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு - திருப்பழுகாமம், விபுலானந்தபுரம் கிராம உத்தியோகஸ்தர் பிரிவில் வசிக்கும் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் தற்கொலை செய்துகொண்ட நிலையில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

பழுகாமம் - மயானத்துக்கு அருகிலுள்ள வீதியில் காணப்படுகின்ற ஆலமரத்தில் தற்கொலை செய்து கொண்ட நிலையில் இவர் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான இராயேந்திரன் இராஜன் (வயது - 36) என்பவரே உயிரிழந்துள்ளார் என ஆரம்பக்கட்ட விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் சம்பவம் தொடர்பில் களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிமன்ற நீதிபதியின் உத்தரவுக்கு அமைய, களுவாஞ்சிகுடி திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெட்னம் பார்வையிட்டு, விசாரணைகளை முன்னெடுத்தமையுடன் சடலத்தை உடற்கூற்று பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு நேற்று மாலை முதல் தபால் ஊழியர்கள் தயார்

பல கோரிக்கைகளை முன்வைத்து 32 மணித்தியால அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம் என தபால் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி நேற்று (திங்கட்கிழமை) மாலை 4 மணி முதல் ஆரம்பித்து இன்று (செவ்வாய்க்கிழமை) வரை வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுப்பதாகத் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

தபால் ஊழியர்கள் மற்றும் தபால் திணைக்களத்தில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகள் ஆகியவற்றை முன்வைத்தே இந்த பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை தபால் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் சங்கத்தின் தலைவர் சிந்திக பண்டார கூறியுள்ளார்.

இதேவேளை நேற்றுக் காலை 10 மணியளவில் பல தபால் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரை சந்தித்து கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# தடுப்பூசி நடவடிக்கை காரணமாக இறப்பு விகிதம் நாட்டில் குறைகிறது

## உபுல் றோஹண கருத்து



இலங்கையில் கொரோனாத் தொற்றால் ஏற்படும் இறப்பு வீதம் குறைவதற்கு தடுப்பூசி நடவடிக்கையே காரணம் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இருப்பினும், தடுப்பூசியை செலுத்திக் கொண்ட பின்னரும் சுகாதார வழிகாட்டுதல்களை அவசியம் பொதுமக்கள் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நாட்டு மக்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதோடு கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையால் சிறுவர்கள் உட்பட தத்தமது குடும்ப உறுப்பினர்களை தொற்று நோயில் இருந்து காப்பாற்ற முடியும் என்றும் உபுல் றோஹண குறிப்பிட்டார்.

# மத்திய வங்கி ஆளுநர் மற்றும் நிதியமைச்சு செயலாளர் ஆகியோருக்கு அமைச்சரவைக் கூட்டத்துக்கு அழைப்பு



நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிக்கல மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டனர்.

கெரவலபிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு விற்பனை செய்வது தொடர்பான ஒப்பந்தத்தில் காணப்படும் தெளிவற்ற தன்மைகளை அமைச்சர்களுக்கு விளக்குவதற்காக, தான் அழைக்கப்பட்டேன் என நிதி அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இலங்கையின் வெளிநாட்டுக் கையிருப்பு தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காகவே அஜித் நிவாட் கப்ரால் அழைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரியவந்தது.

இலங்கை எதிர்நோக்கும் அந்நியச் செலாவணி நெருக்கடியைச் சமாளிக்க சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவது தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இலங்கை தற்போது கடுமையான அந்நியச் செலாவணி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தினார்.

இருப்பினும் இலங்கை மத்திய வங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைக் கோரியதாக வெளியான செய்திகள் பொய்யானவை என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# பதினொரு உயிர்கள் பலிகொள்ளப்படுவதற்கு உடந்தையாக இருந்தவருக்கு இந்திரப் பதவி!

பதினொரு உயிர்களைப் பலிகொள்வதற்கு உடந்தையாக இருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு இந்திரப் பதவி வழங்கப்பட்டுள்ளது. பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர்கள் நடுத்தெருவில் விடப்பட்டுள்ளார்கள்.

கொழும்பில் பணத்துக்காக வெள்ளைவானில் கடத்திச் சென்று 11 இளைஞர்களைக் (பெரும்பாலோர் தமிழ் மாணவர்கள்) கொல்லப்படுவதற்குத் துணை போனார் எனக் குற்றம் சாட்டப்பட்ட வசந்த கரன்னகொட வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரது ‘சாதனையைப்’ பாராட்டி பதவி கொடுத்தவர் போர்க்குற்றம் சாட்டப்பட்ட அன்றைய பாதுகாப்புச் செயலாளரும் இன்றைய ஜனாதிபதியுமாகிய கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து இந்தப் பதவிப்பிரமாணம் செய்யப்பட்டது.

முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொட மீது, இறுதி யுத்தம் நடந்த 2008 – 2009 ஆம் ஆண்டுக் காலத்தில், கொழும்பில் செல்வந்த குடும்பங்களைச் சேர்ந்த 11 மாணவர்கள் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டார்கள். கடத்தியவர்கள் வேறு யாருமல்லர், கடற்படைத் தளபதி கரன்னகொடவின் கீழ் பணியில் இருந்த மாலுமிகள். கடத்தப்பட்ட இளைஞர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றால் கப்பம் கொடுக்கவேண்டும் என்று கேட்கப்பட்டது. இந்த இளைஞர்கள் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் திருகோணமலை மற்றும் கொழும்பு கடற்படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

சில பெற்றோர்கள் கப்பம் கொடுத்தார்கள். ஆனால் கப்பத்தை வாங்கிய பின்னரும் மாணவர்கள் ஈவு, இரக்கமின்றிக் கொலை செய்யப்பட்டார்கள். அவர்களது உடல்கள் கூடக் கிடைக்கவில்லை. இது தொடர்பாக சுசில் கிந்தல்பிட்டிய என்பவர் கடத்திச் செல்லப்பட்ட 11 பேரின் பட்டியல் ஒன்றை குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் கையளித்திருந்தார். கஸ்தூரியாராச்சி ஜோன், தியாகராஜா ஜெகன், ராஜீவ் நாகநாதன், சூசைப்பிள்ளை அமலன், சூசைப்பிள்ளை ரோஷன், கஸ்தூரியாராச்சி அன்டன், பிரகீத் விஸ்வநாதன், திலகேஸ்வரன் ராமலிங்கம், மொஹமட் திலான், மொஹமட் சாஜித் மற்றும் அலி அன்வர் ஆவர். இதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர், வெள்ளை வான் கலாசாரத்தின் மூலகர்த்தா முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ எனக் குறிப்பிட்டிருந்தார்.

நக்கீரன்

இந்த வழக்கில் இலங்கைக் கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னகொட 2019 ஆம் ஆண்டில் சட்டபூர்வமாக 14 ஆவது சந்தேக நபராக வழக்கில் சேர்க்கப்பட்டிருந்தார். கொலைகள் பற்றித் தெரிந்திருந்தும் நீதியைத் தடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டார். கடற்படைத் தளபதி கரன்னகொட மீது சாட்டப்பட்ட இந்தக் குற்றச்சாட்டு மரணதண்டனைக்குரிய குற்றமாகும்.

நாட்டின் 37 ஆண்டு உள்நாட்டுப் போரின் போது நீதிக்குப் புறம்பான கொலைகள் குறித்துக் கவனத்தை ஈர்த்த வழக்குகளில் இதுவும் ஒன்றாகும். இந்தக் கொலைகள் தொடர்பாக அப்போது கடற்படையின் முன்னாள் பேச்சாளர் மற்றும் மூன்று கடற்படை அதிகாரிகள் உட்பட பல கடற்படை மாலுமிகள் கைது செய்யப்பட்டனர்.

2017 இல் சிறிலங்காவின் பாதுகாப்புப் படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, பிரதான சந்தேகநபரான லெப்டினன்ட் கமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி என அழைக்கப்படும் ‘நேவி சம்பத்’ என்பவரை கைது செய்யாமல் தப்பிச் செல்ல உதவிய குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அழைக்கப்பட்டமையைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

2019 இல் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் சிறிசேனா – ரணில் ஆட்சியில் கொலை, வெள்ளைவான் கடத்தல், ஆயுத விற்பனை போன்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களில் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட பலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீதான வழக்குகள் திரும்பப் பெறப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டு குற்றஞ்சாட்டப்பட்ட கரன்னகொடவுக்கு எதிராக அரசாங்கம் குற்றச்சாட்டைத் தொடராது என சட்ட மா அதிபர் சஞ்சய் இராசரத்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றில் தெரிவித்தார். சர்வதேச கண்டனத்தை பெற்ற 11 கொலைகளுடன் தொடர்புடைய முன்னாள் கடற்படைத் தளபதிக்கு எதிரான கொலைச் சதி உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை இலங்கை அதிகாரிகள் கைவிட்டுள்ளனர் என சட்ட மா அதிபர் அறிவித்துள்ளார்.



**முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட மீது, இறுதி யுத்தம் நடந்த 2008 – 2009 ஆம் ஆண்டுக் காலத்தில், கொழும்பில் செல்வந்த குடும்பங்களைச் சேர்ந்த 11 மாணவர்கள் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டார்கள். கடத்தியவர்கள் வேறு யாருமல்லர், கடற்படைத் தளபதி கரன்னகொடவின் கீழ் பணியில் இருந்த மாலுமிகள். கடத்தப்பட்ட இளைஞர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றால் கப்பம் கொடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டது.**

கடந்த சிறிசேனா – ரணில் ஆட்சியில் கொலைக் குற்றம் உட்பட பல குற்றங்கள் சாட்டப்பட்டவர்கள் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் விடுவிக்கப்படுகிறார்கள். சட்ட மா திணைக்களத்தின் சட்ட மா அதிபர் பதவிகளை வகிப்பவர்கள் நாட்டின் ஜனாதிபதிகளின் தாளத்துக்கு ஏற்ப – அவர்களின் விருப்பு, வெறுப்புக்கு ஏற்ப – ஆடுகிறார்கள் என்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

சட்டமன்றம், நிறைவேற்றுத்துறை, நீதித்துறை மற்றும் ஊடகம் ஆகியவை ஜனநாயகத்தின் நான்கு தூண்களாகக் கருதப்படுகின்றன. ஒவ்வொரு தூணும் அதன் எல்லைக்குள் செயற்பட வேண்டும். ஒன்றுக்கொன்று சார்பாக நடந்து கொள்ள வேண்டும். ஆனால் இலங்கையில் நான்கு தூண்களில் ஒன்றான நீதித்துறை துருப்பிடித்துப் போய்விட்டது.

சட்டதிருத்தம் 20 நாட்டின் ஜனாதிபதி கோட்டாபயவை ஒரு சர்வாதிகாரியாக்கிவிட்டது. அதனால் ஜனாதிபதி முழு அரச இயந்திரத்தையும் தனக்கு வசதியாக வளைக்கிறார் என்பது தெரிகிறது. நவம்பர் 2019 இல் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின் சிறிசேனா – ரணில் ஆட்சியில் கொலை, வெள்ளைவான் கடத்தல், ஆயுத விற்பனை போன்ற குற்றச்சாட்டுக்களில் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட பலர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மிருசுவில் கிராமத்தில் 3 சிறுவர்கள் உட்பட 8 பேர் டிசெம்பர் 2000 இல் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டார்கள். அந்த வழக்கில் இராணுவ அதிகார சுனில் ரத்னாயக்கவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு அவர் சிறையில் அடைக்கப்பட்டார். ஜனாதிபதி கோடாபய ராஜபக்ஷ மார்ச் 26, 2020 அன்று நீதிமன்றத்தால் கொலைகாரன் எனத் தீர்ப்பளிக்கப்பட்டவருக்கு பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்தார்.

நீதிமன்றத்தால் கொலைகாரன் எனத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவரை, ஜனாதிபதி மன்னித்து விடுதலை செய்தமை தமிழர்கள் மத்தியில் எதிர்ப்பு உணர்வலைகளை ஏற்படுத்தியது. நீதித் துறைக்கே பெரிய அவமானம் என மனித உரிமையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

2011 ஆம் ஆண்டு அரசியல் எதிரியான பாரத லக்ஷ்மன் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் மூவரைக் கொன்ற குற்றத்துக்காக 2016 ஆம் ஆண்டு துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஜனாதிபதி கோட்டாபயவின் அரசியல் கூட்டாளியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. அவருக்கு அரசாங்கத்தில் பதவியும் வழங்கப்பட்டது. மனித உரிமைகள் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் பி.பி.சிக்கு அளித்த நேர்காணலில் துமிந்த சில்வாவின் மன்னிப்பில் சட்டத்தின் ஆட்சி, பொறுப்புக்கூறல் மற்றும் சட்ட நடைமுறைகள் இல்லை என்று கூறினார்.

லக்ஷ்மனின் மகள் ஹிருணிகா பிரேமச்சந்திர, தனது தந்தைக்கு நீதி கிடைப்பதற்குக் கடினமாகச் சட்டப் போராட்டம் நடத்தினார். அதில் அவர் வெற்றிபெற முடியவில்லை. இன்று சிறிலங்கா தனது 73 ஆண்டு கால வரலாற்றில் சந்தித்திராத கடுமையான பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது. வெளிநாட்டுக் கடன் பளு, சுற்றுலாத் துறையில் வீழ்ச்சி, அந்நிய நாணயப் பற்றாக்குறை, விலைவாசி உயர்வு, பண வீக்கம், அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு ஆகியன நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளிவருகின்றன.

2014 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை வெளிநாட்டுக் கடன் பளு அதிகரித்து வருகிறது. 2019 ஆம் ஆண்டளவில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 42.9 வீதத்தை எட்டியது. கொவிட்-19 தொற்று நோயால் தூண்டப்பட்ட உலகளாவிய மந்தநிலை நெருக்கடியை அதிகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 101 வீதம் ஆக உயர்ந்து பொருளாதார சரிவை ஏற்படுத்தியுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி 2020 இல் 3.5 சதவீதமாக வீழ்ச்சி கண்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு கடைசியில் வெளிநாட்டு நாணய இருப்பு அமெரிக்க டொலர் 7.6 பில்லியனாக இருந்தது. இப்போது அது 1.2 பில்லியனாகச் (நவம்பர்) சரிந்துள்ளது. ஒரு நாட்டின் அந்நிய நாணய இருப்புக் குறைந்தது 3 மாத இறக்குமதிக்கு ஈடாக இருக்க வேண்டும். அந்நிய நாணய இருப்புப் பற்றாக்குறை காரணமாக ரூபாவின் பெறுமதி ஒரு கனேடிய டொலருக்கு ரூபா 158 ஆகக் குறைந்துவிட்டது. அதே சமயம் கறுப்புச் சந்தையில் அதன் பெறுமதி ரூபா 188 ஆகக் காணப்படுகிறது. இந்த ஆண்டு இறுதியில் சிறிலங்காவின் மொத்தக் கடன் தொகை அமெரிக்க டொலர் 35.1 பில்லியன் ஆகும். வெளிநாட்டுக் கடனில் எதிர்வரும் ஜனவரி மாதம் அமெரிக்க டொலர் 50 கோடியும் ஜுன் மாதம் அமெரிக்க டொலர் 100 கோடியும் திருப்பிச் செலுத்த வேண்டும். மேலும் 2022 இல் அமெரிக்க டொலர் 450 கோடி பெறுமதியான இறையாண்மை பிணைமுறிவுகளை மீட்கவேண்டும்.

அண்மையில் நிதி அமைச்சர் பஸில் இந்தியாவிடம் கடன் வாங்க பிச்சா பாத்திரத்தோடு போயிருந்தார். இந்தியா அமெரிக்க டொலர் 100 கோடியைக் கடனாகவும், இந்திய மத்திய வங்கி அமெரிக்க டொலர் 40 கோடி எஸ்.டபிள்யு.ஏ.பி. வசதி மற்றும் ஒருங்கிணைந்த கடன் வசதியிலிருந்து 30 கோடி அமெரிக்க டொலர் ஆகியவை கொடுப்பதற்கு இணங்கியுள்ளது. மேலும் கட்டார் நாட்டு மத்திய வங்கியிடம் 100 கோடி அமெரிக்க டொலர் எஸ்.டபிள்யு.ஏ.பி. ஆக பெறவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

சிறிலங்கா எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண வேண்டிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரோம் எரியும் போது வீணை வாசித்த நீரோ போல 11 இளைஞர்களின் கொலைக்குத் துணையாக இருந்த வசந்த கரன்னகொட மீதான வழக்கைத் திருப்பிப் பெற்றது மட்டும் அல்லாமல் அவரை வடமேல் மாகாண ஆளுநராக நியமித்து அழகு பார்க்கிறார்.

ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

50

# மெய்நிகர் வகுப்பறை
## Online Classroom

நேற்றைய தினம் வெளியாகவிருந்த இந்தக் கட்டுரை தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்றைய தினம் பிரசுரமாகின்றது.



### கல்வியில் QR குறியீட்டை எவ்வாறு பயன்படுத்தலாம்?

யாழ்ப்பாணத்தில் ‘சுப்பர் மார்க்கட்’ சுயசேவைக் கடைகள் பல இடங்களிலும் திறக்கப்படுகின்றன. அந்தக்கடைகளில் வாடிக்கையாளர்கள் தமக்குத் தேவையான பொருள்களை தாமே தேர்ந்தெடுத்து அவற்றுக்கு பற்றுச்சீட்டு பெற்று பணம்கொடுத்து கொண்டுவரமுடியும். அவ்வாறு அங்கு விற்கப்படும் பொருள்களுக்கு விலை அச்சடிக்கப்பட்டிருக்கும் அதனை ஸ்கான் செய்வதன் மூலம் காசாளர் இலகுவாக விலைப்பட்டியலை தயார் செய்து செலுத்த வேண்டிய தொகையை குறிப்பிடுவதைப் பார்த்திருக்கிறோம்.

இந்தவாறான சுயசேவைக் கடையில் விற்கப்படும் ஒவ்வொரு பொருள்களுக்கும், தடிமனான மற்றும் மெல்லிய கோடுகளின் வரிசையைக் கொண்ட பார் குறியீட்டைக் (Bar Code) காணமுடியும். இந்த பார் குறியீட்டில் பொருளின் அடையாளக் குறியீடு, பெயர் மற்றும் விலை போன்ற பொருள் பற்றிய சில தகவல்கள் உள்ளன. ஆனால், அதிக தகவல்களை அதில் சேமிக்க முடியாது. விரைவான மறுமொழி குறியீடுகள் (Quick Response) என்பது இதன் விரிவாக்கமாகும். இதில் கறுப்பு மற்றும் வெள்ளை சதுரங்களின் 2 பரிமாண மெட்ரிக்குகள் காணப்படும் எனலாம். அதில் அதன் நீளம் மற்றும் அகலத்தில் தகவல்களைச் சேமிக்க முடியும். QR குறியீடுகள் பல தகவல்களை வைத்திருக்கலாம். உதாரணமாக இணையத்தள முகவரி, யூரியூப் தொடுப்பு, முகப்புத்தக விவரம், தொலைபேசி இலக்கம், போன்றவற்றை QR குறியீட்டில் சேமிக்கலாம்.

எனவே, இந்த QR குறியீடுகள் இன்று வாழ்வின் பல தேவைகளை நிறைவேற்றப் பயன்படுகின்றன. இதற்கு தேவையானது QR குறியீட்டு ஸ்கானர் மற்றும் இதற்கான செயலி ஆப்ஸ் மட்டுமே. ஒரு கையடக்கத் தொலைபேசியில் இந்த ஆப்ஸை தரவிறக்கம் செய்து பதிந்து கொண்டால் அதனை ஒரு ஸ்கேனராகப் பயன்படுத்தலாம். கையடக்கத் தொலைபேசியை QR குறியீட்டின் மேல் கைபேசியின் கமராவைப் பிடித்து அதனை வாசிக்க முடியும். இதன்போது QR குறியீட்டில் சேமிக்கப்பட்டுள்ளவற்றுக்கு ஆப்ஸ் தானாகவே வழிநடத்தும். இதன் சிறந்த அம்சம் என்னவென்றால், இது இலவசம் மற்றும் ஆண்ட்ராய்டு தொலைபேசிகள், ஐபோன்கள், டேப்லெட்டுகள் மற்றும் மடிக்கணினிகளில் இதன் பயன்பாடு நன்றாக வேலை செய்கிறது.

இந்த தொழில்நுட்பம் இலகுவானது. இதன்வழி ஒரு QR குறியீட்டை புதிதாக உருவாக்கவும் முடியும். இதுவொரு கடினமாக பணியில்லை. QR குறியீடு ஜெனரேட்டரைப் பயன்படுத்தி இலகுவாக இதனைச் செய்ய முடியும்.

இந்த வசதி தற்போது மெய்நிகர் வகுப்பில் அதிகளவு பயன்படுத்தப்படுகின்றது. கல்வியில் QR குறியீடு மிகப்பயனுள்ள பலன்களை வழங்கக்கூடியதாகும். கற்பவர்கள் தங்கள் கற்றல் தேவைக்காக ஒரு இணைத் தளத்திற்குள் செல்வதற்கு இணையதள முகவரியை அணுக வேண்டும். அதாவது URL ஒன்றை அணுக வேண்டும். இதற்கு QR குறியீட்டை பயன்படுத்தி இணையத்தளத்திற்குள் வேகமாக உள்நுழைய முடியும். அதாவது இணையத்தள URL ஸ்கான் செய்வதன் மூலம் குறியீட்டினை வாசித்து உள்நுழைய முடியும். இதன்மூலம் நேரத்தைச் சேமிக்க முடிகிறது.

தற்போது மெய்நிகர் கற்பித்தலில் ஒரு கணித ஆசிரியர் மெய்நிகர் கற்றல் தளத்தை பயன்படுத்த விரும்புகிறார் என்று வைத்துக்கொள்வோம். அதற்கு ஒரு URL உள்ளது. ஒவ்வொரு மாணவரும் அந்த இணைய முகவரியை (URL) ஐ தட்டச்சு செய்ய வேண்டும். முழு வகுப்பையும் அந்த இணைத்தளத்திற்குள் நுழையச்செய்ய வேகப்படுத்த 10 - 15 நிமிடங்கள் ஆகலாம். ஆனால் QR குறியீட்டைப் பயன்படுத்தி இந்த சிக்கலை இலகுவாகத் தீர்க்க முடியும்.

### QR (Quick Response) குறியீடு என்றால் என்ன?

QR குறியீடு என்பது பார் குறியீட்டைப் போன்றது. அதாவது விரைவான பதிலைக் குறிக்கிறது. பயனருக்குத் தகவலை வழங்கும் தனித்துவமான கட்டமைப்பில் சதுரப் புள்ளிகளைக் கொண்ட படம்.

இணையத் தளங்கள், வீடியோக்கள், கோப்புகள் மற்றும் பலவற்றுக்கு QR குறியீடுகள் உண்டு. QR குறியீடுகளை வகுப்பறையில் பயன்படுத்துவது பாதுகாப்பானது, அதனால் மாணவர்கள் வழிதவறிச் செல்வது பற்றி எந்தக் கவலையும் இல்லை. QR குறியீடு வழியாக குறித்த ஒன்றிற்கு மட்டுமே அணுக முடியும்.

QR குறியீடுகளைப் பயன்படுத்துவதற்குப் பல காரணங்கள் உள்ளன, குறிப்பாக, முக்கியக் காரணம், மாணவர்களுக்கு இணைய முகவரிகளை வழங்குவது எளிதானதாகும். அதாவது ஞசு குறியீடுகள் இணைய முகவரியைத் தட்டச்சு செய்யும் மாணவர்களின் விரக்தியைக் குறைக்கின்றன. ஏழு வயது குழந்தைக்குத் துல்லியமாகத் இணையமுகவரியை தட்டச்சு செய்வது கடினம். இதனால் இந்தவசதி அவர்கள் இலகுவாக இணையவசதியை அணுகவாய்ப்பளிக்கிறது. அதே நேரம் நேரத்தைச் சேமிக்க முடியும் மேலும் மாணவர்கள அதைச் சரியாகப் பெறுவார்கள். இங்கு மாணவர்கள் இணையதள முகவரியை தவறாக எழுதுவதற்கு வாய்ப்பு இல்லை.

இன்று பெரும்பாலான வகுப்பறைகள் ஸ்மார்ட் சாதனங்களுக்கு மாறிவருகின்றன. இதனால் இந்த அணுகுமுறை சாத்தியமானதென்றே எனக் கூறலாம். டெஸ்க்டாப்புகளுக்கு சில QR ரீடர்கள் உள்ளன, அவற்றைப் பயன்படுத்தலாம்.

QR குறியீட்டை உருவாக்க பல கருவிகள் உள்ளன. இதற்காக QREncoder போன்ற பயன்பாட்டைப் பயன்படுத்தலாம். இது விரைவானது மற்றும் எளிதானது. இதன்மூலம் குறியீட்டை ஒரு படமாகச் சேமித்து அதை அச்சிடலாம் அல்லது எந்த ஆவணத்திலும் செருகலாம். ஆகவே ஆசிரியர் தான் கற்பித்தலுக்காகத் தயாரித்தவற்றிற்கு QR குறியீட்டை இட்டு இதனை மெய்நிகர் வெளியில் வெளியிடுவதன்மூலம் அதனை மாணவர்கள் விரைவாக அணுகும் வாய்ப்பை வழங்கலாம்.

வகுப்பறையில் QR குறியீடுகளைப் பயன்படுத்துவது மிகவும் பயனுள்ளதாகவுள்ளது. சிறிய வகுப்பு மாணவர்கள் தங்கள் சாதனத்தை எடுத்து, குறியீட்டை ஸ்கேன் செய்து, அவர்களுக்கு உரக்க வாசிக்கும் கதையைக் கேட்கிறார்கள். பெரியவர்கள் உதவியில்லாமல் மாணவர்கள் கேட்பதற்கும் படிப்பதற்கும் இதுவொரு சிறந்த வழியாகும்.

ஸ்மாட் கைத்தொலைபேசி மூலம் QR குறியீட்டை ஸ்கேன் செய்யும் போது, அதற்கான செயலி போனின் பின்புற கமராவைப் பயன்படுத்துகிறது. பின்புற கமரா தரம் குறைந்ததாக இருந்தால், QR குறியீடு சரியாக ஸ்கேன் செய்யப்படாது. QRகுறியீடுகள் சிறிய சதுரங்களின் வரிசையென்பதால், துல்லியத்தை உறுதிப்படுத்த ஒப்பீட்டளவில் உயர்தர கமரா தேவைப்படுகிறது.

இறுதியாக, எல்லாவற்றையும் சுருக்கமாகச் சொல்வதென்றால், Quick Response Codeகள் என்பது 2D பார் குறியீடுகளாகும், அவை கிட்டத்தட்ட எந்த வகையான தரவையும் வைத்திருக்க முடியும். அதனை எளிய முறையில் உருவாக்கி எந்தவொரு பொருளுக்கும் வழங்கமுடியும். இதற்கு QR குறியீடு ஸ்கேனர் செயலி தேவை. கல்வியில், வகுப்பறையில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் மெய்நிகர் வகுப்றைகளில் இணையமுகவரிகளை வைத்திருக்க QR குறியீட்டைப் பயன்படுத்தலாம், இதனால் உள்நுழைவதில் நேரத்தை மிச்சப்படுத்தலாம்.

ஐபாட்கள், ஐபோன்கள் அல்லது பிற ஸ்மார்ட் போன்கள் போன்றவற்றோடு இணைய இணைப்பு வசதியிருந்தால் QR குறியீடுகளை எளிதாக உருவாக்கலாம். இது செயல்படுத்த எளிதானது மற்றும் மாணவர்களுக்கு சுதந்திரமான உலகத்தைத் திறக்கிறது எனலாம். இந்த வசதி மெய்நிகர் வகுப்பறையை மேலும் சிறப்பிக்கிறது.

# தமிழ் பேசும் கட்சிகளின் ஒருமித்த தீர்மானம் சில கட்சிகளை ஒதுக்கிவிட்டு அறிவிப்பது தவறு

## ஆனந்த சங்கரி காட்டம்



குறிப்பிட்ட ஒரு சில கட்சிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தமிழ் பேசும் கட்சிகளின் ஒருமித்த தீர்மானம் என்று ஊடகங்கள் முடிசூட்டுவதை தயவு செய்து நிறுத்திக்கொள்ள வேண்டும் என தமிழர் விடுதலைக்கூட்டணி தெரிவித்துள்ளது. ஊடக அறிக்கை ஊடாக இந்த விடயத்தைக் குறிப்பிட்டு தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரியால் அறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

ஒரு சில கட்சிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தமிழ் பேசும் கட்சிகளின் ஒருமித்த தீர்மானம் என்று ஊடகங்கள் முடிசூட்டுவதைத் தயவு செய்து நிறுத்திக்கொள்ள வேண்டும்.

ஒரு சில கட்சிகள் ஒன்று சேர்ந்து எடுத்திருக்கும் முடிவு தமிழ் மக்களுக்கு மேலும் ஆபத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தும் என்பதைக் குறிப்பிட்ட கட்சிகளின் தலைவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பதை நினைக்கும் பொழுது வேதனையைத் தருகின்றது.

அந்நிய நாடுகளின் அழுத்தத்தைப் பிரயோகிக்கச் சொல்லிக் கோருவது முட்டாள் தனமான செயற்பாடாகும். இதன் மூலம் உள்ளூர் அரசியல்வாதிகளையும் பெரும்பான்மையின கடும் போக்காளர்களையும் கோபமடையச் செய்யும் செயலாகும். அதுமட்டுமல்ல குறிப்பிட்ட நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள புரிந்துணர்வைச் சிதைக்கும் செயற்பாடாகவும் அமைந்து விடும்.

இலங்கை ஓர் இறைமையுள்ள நாடாகும். எந்த ஒரு நாடும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் தலையிடுவதை இலங்கையும் விரும்புவதில்லை.

குறிப்பிட்ட நாடுகளும் இந்த விடயத்தில் மென்மையான போக்கையே கடைப்பிடிக்கும். இந்த விடயம் அனைத்துத் தரப்பினருக்கும் தெரிந்திருந்தும் மக்களை முட்டாள்களாக்குகின்றமை வன்மையாக கண்டிக்கத்தக்க விடயமாகும்.

எந்த ஒரு காலகட்டத்திலும் சமஷ்டி என்ற பேச்சிற்கே இடமில்லை என்று அனைத்துத் தரப்பினரும் கூறிய பின்பும் 'சமஷ்டியை பெற்றே தீருவோம்' என்று அறிக்கை விட்டு மக்களை ஏமாற்றுவதை நிறுத்திக் கொள்ளுங்கள். 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்கிய ரணில் விக்கிரமசிங்க சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து போட்டியிட்டார். அதற்கு எதிராக பிரசாரத்தை மேற்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் தடுத்து ஒற்றையாட்சிக் கோரிக்கையை முன்வைத்து போட்டியிட்ட மஹிந்த ராஜபக்ஷவை வெற்றிபெறச்செய்தனர்.

இருந்தும் 49 சதவீதத்துக்கு மேற்பட்ட சிங்கள மக்கள் சமஷ்டிக் கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வரலாற்றுத் தவறை செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று சமஷ்டிக் கோரிக்கையை வைத்து கொக்கரிப்பது வேடிக் கையாக இருக்கின்றது. சமஷ்டி பற்றி பேசும் அருகதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குக் கிடையாது. இவர்களுடன் இணைந்து ஒரு சில கட்சிகள் கூடிப் பேசுவது பெரும் வியப்பாக இருக்கின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி அன்று தொட்டு இன்று வரை இந்திய முறையிலான ஓர் அரசியல் தீர்வையே முன்வைத்து வருகின்றது. இதற்கு மேலாக இந்தியாவும் எமக்கு எதையும் பெற்றுத்தரப் போவதில்லை. பெருமளவு சிங்கள மக்களும் அரசியல் தரப்பினரும் ஒரு காலத்தில் இதற்கு ஆதரவு தெரிவித்தனர். அதன் அடிப்படையில் இன்று இலங்கையிடம் சமரசமாகப் பேசிப் பெற்றுக் கொள்ள முயற்சிப்பதே சாலச் சிறந்ததாகும்.

2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் பல மான விடுதலைப் புலிகள் அமைப்பை வைத்துக் கொண்டு அவர்களால் மக்களுக்கு எதனையும் பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை நல்லாட்சி அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளைவகித்துக்கொண்ட நேரத்தில் கூட தமிழ் மக்களின் பிரச் சினைகளுக்கு எதுவிதத் தீர்வையும் பெற்றுக்கொடுக்க முன்வரவுமில்லை. முயற்சிக்கவுமில்லை. இன்று இவர்களுடன் இணைந்து ஒரு சில கட்சிகள் ஒருமித்து தீர்மானங்களை நிறைவேற்றுவது நகைப்பிற்குரிய விடயமாகும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன் பிரகாரம் ஜனாதிபதி செயலாளர் பதவியில் விரைவில் மாற்றம் வரவுள்ளது எனவும், புதிய ஜனாதிபதி செயலாளராக முன்னாள் அமைச்சரவை செயலாளரான அமரசேகர நியமிக்கப்படவுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

அமரசேகர தற்போது தென்னாபிரிக்காவுக்கான இலங்கைத்தூதுவராக செயற்பட்டு வருகின்றார்.

## 27 பேர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 14 ஆண்களும், 13 பெண்களும் அடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 641 ஆக அதிகரித்துள்ளது.

## உதயன் பத்திரிகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடுத்த 3 வழக்குகள் நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதன் போது அமைச்சர் சார்பிலான சட்டத்தரணிகள் முன்னிலையான போதும் அமைச்சர் மன்றிற்கு சமுகமளித்திருக்கவில்லை.

இரு வழக்குகளில் பத்திரிகை ஆசிரியராக கானமயில்நாதனின் பெயர் குறிக்கப்பட்டிருந்த நிலையில் கானமயில்நாதன் மரணமடைந்தமையினால் அதுதொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்த அபிப்பிராயத்தை மன்றிற்குச் சமர்ப்பிக்க ஜனவரி 10ஆம் திகதி வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டது.

இதேநேரம் 3 ஆவது வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. முறைப்பாட்டாளரான அமைச்சர் இன்று கொழும்பில் இடம்பெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொள்கின்றமையால் நீதிமன் றிற்கு சமுகமளிக்க முடியவில்லை என்றும், எனவே வேறு திகதியிடுமாறு அமைச்சர் சார்பு சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. வழக்கு மே மாதம் 10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## போதைப்பொருளு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)


நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் சட்டவிரோத போதைப்பொருள் வியாபாரம் இடம் பெறுகின்றது என இராணுவ புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அந்த இடத்தை முற்றுகையிட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவினர், போதைப்பொருள் வியாபாரியைக் கைது செய்ததுடன், அவரிடமிருந்து சுமார் ஒரு கிலோ கஞ்சா மற்றும் 10 மில்லிகிராம் ஹெரோயின் ஆகியவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு (இணுவில்) 30 – 03 – 1933



மறைவு சிட்னி 09 – 12 – 2021

### அம்பலம் ஞானதுரை

**இணுவில் மேற்கு**

**(ஓய்வு பெற்ற ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி)**

யாழ்ப்பாணம், இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில், ஒக்லந்து (நியூசிலாந்து), சிட்னி (அவுஸ்திரேலியா) ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் அம்பலம் ஞானதுரை 09/10/2021 வியாழக்கிழமை (கார்த்திகை மாதம் 23ஆம் திகதி வளர்பிறை சஷ்டி) அன்று சிட்னியில் இறைவனடி சேர்ந்தார்.

இவர், காலம் சென்றவர்களான அம்பலம் (அம்பலவாணர்) – குஞ்சிப்பிள்ளை தம்பதியரின் இளைய புதல்வனும், ஐயாத்துரை – பொன்னம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற இந்திராணியின் அருமைக் கணவரும், காலஞ்சென்ற அருந்தயாபரன் (நியூசிலாந்து), தயாநந்தி திருநந்தகுமார், கிருபாநந்தி கந்தராஜா, கலைச்செல்வி உதயகுமாரன், விவேகானந்தி கந்தகுமாரன், மயூரானந்தி சுரேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திருச்செல்வகுமாரி ஜனநாயகம் (நந்தா), திருநந்தகுமார், காலஞ்சென்ற திருநந்தகுணாளன், திருகுகசக்தி அருணாசலம் ஆகியோரின் தாய்மாமனும்,காலஞ்சென்ற வத்சலா, காலஞ்சென்ற செந்தில்குமார், குலமதி கலாதரன் ஆகியோரின் சிறிய தந்தையும், கீதா அருந்தயாபரன், கந்தராஜா, உதயகுமாரன், கந்தகுமாரன், சுரேஸ், மிதுலா பகீரதன், மிருணன், நித்திலா இரவிச்சந்திரன் ஆகியோரின் அருமை மாமனாரும், காலம் சென்றவர்களான சுப்பிரமணியம், கணபதிப்பிள்ளை, பவளரத்தினம் திருநாவுக்கரசு ஆகியோரின் இளைய சகோதரனும், பாலச்சந்திரன், லதாராணி, இரவிச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும், காலம்சென்றவர்களான சிவேஸ்வரதம்பி, சித்திரா இரவிச்சந்திரன் ஆகியோரின் சகலனும், வேதகி, அபிராமி, பிரசாந்த், ஆதித்தன், பிரணவன், பிரனோஜன், காருண்யா, கபிலன், துளசி, சாயிராம், கீர்த்திகன், மைதிலி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல், ருக்வுட் (South Chappel, Rookwood Cemetery, NSW) நிலையத்தில் 16/12/2021 வியாழக்கிழமை பகல் சிட்னி நேரம் முற்பகல் 11.30 மணிக்கு பார்வைக்கு வைக்கப்பட்டு, பிற்பகல் 12. 30 மணி முதல் இறுதிக்கிரிகைகள் நடைபெற்று மின் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Viewing: 11. 30 am to 12.30 pm (AEST)
Last Rites: 12.30 pm to 2.00pm
ZOOM Meeting ID: 788 963 6705
Passcode: 161221

**தகவல்: திருநந்தகுமார், மருமகன்**
**இராணி மாளிகை காங்கேசந்துறை வீதி, இணுவில் மேற்கு, இலங்கை**
31 Fitzwilliam Road, Old Toongabbie, NSW 2146, Australia

தொடர்புகளுக்கு:
லதாராணி (இணுவில்) – +94 765758651
இரவிச்சந்திரன் (இணுவில்) – +94 776770420
திருநந்தகுமார் (சிட்னி) – +61 403534458

காலைக்கதிர் Kalaikkathir

## 2022 ஜனவரி 18 ஆம் திகதி வரை

# நாடாளுமன்ற அமர்வை இடைநிறுத்திய கோட்டா

## அடுத்து என்ன நடக்கும்?

நாடாளுமன்றக் கூட்டத் தொடரை நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் இடைநிறுத்தும் விதத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் விசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த அறிவித்தலின் பிரகாரம் புதிய நாடாளுமன்றக் கூட் டத்தொடர் 2022 ஜனவரி 18 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வரவு – செலவுத் திட்டக் கூட்டம்தொடர் முடிவடைந்ததும் வழமையாக நாடாளுமன்றம் 3 வாரங்கள் வரை ஒத்திவைக்கப்படும்.

இதன்படி 2022 ஆம் ஆண்டுக்கான அமர்வை ஜனவரி 11 ஆம் திகதி நடத்துவதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நாடாளுமன்ற அமர்வு ஜனாதிபதியால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

2022 ஜனவரி 18 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாகும் என ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய நாளில் சபைக்கு தலைமை தாங்கி, புதிய கூட்டத்தொடரை ஜனாதிபதியே சம்பிரதாயப்பூர்வமாக ஆரம்பித்து வைக்கவேண்டும். ஜனாதிபதியின் கொள்கைவிளக்கஉரையும் இடம்பெறும்.

இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை உருவாக்கப்படுவதற்கு முன்னர், நாடாளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்டால் – புதிய அமர்வின் ஆரம்பத்தில் அக்கிராசன உரை இடம்பெறும். இது மீது வாக்கெடுப்பு நடத்தப்படும்.

ஆனால், தற்போது ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்படுவதில்லை. எதிரணிகள் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் பிறிதொரு நாளில் அது பற்றி சபை ஒத்திவைப்புவேளை விவாதம் நடத்தப்படலாம். தற்போதும் ஜனாதிபதியின் உரையை 'அக்கிராசன' உரை என சிலர் அடையாளப்படுத்தினாலும் 'கொள்கை' விளக்க உரை என்பதே சரியானதாகும்.

அரசமைப்பின் 70 (1) உறுப்புரிமைக்கமைய நாடாளுமன்றக் கூட்டத்தொடரை இடைநிறுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அவ்வாறு நாடாளுமன்றம் இடைநிறுத்தப்படும் நாளில் இருந்து இரண்டு மாதங்களுக்கு மேற்படாத வகையில் நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாக வேண்டும். அதற்கான திகதியும் குறித்தொகுக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்டாலும் அக்காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிநிலை பாதுகாக்கப்படும். சபாநாயகரும் தொடர்ந்து செயற்படுவார். நாடாளுமன்ற ஒழுங்கு பத்திரத்தை மீளமைக்க வேண் டிவரும்.



நாடாளுமன்றத்தில் ஏற்கனவே செயற்பட தெரிவுக்குழுக்கள் புதிய அமர்வின் ஆரம்பத்தில் மறுசீரமைக்கப்படும். நாடாளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்டாலும் உயர் பதவிகளை அங்கீகரிப்பது தொடர்பான அரசியலமைப்பு பேரவை தொடர்ந்து இயங்கும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காலத்திலும் நாடாளுமன்ற அமர்வுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பாலா அண்ணாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழர்கள் வாழும் நாடெங்கும் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழர் விடுதலைப்போராட்டத்தின் அரசியல் நகர்வுகளில் தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குப் பக்கபலமாக இருந்து செயற்பட்டு 2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி ஆயிரம் ஆயிரம் மாவீரர்களுடன் இணைந்து தேசத்தின் குரலாக தமிழீழத் தேசியத் தலைவரால் மதிப்பளிக்கப்பட்டு ஈழ விடியலில் வரலாறானார்.

தேசத்தின்குரல் அன்ரன் பாலசிங்கத்தின் மறைவு தமிழர் விடுதலைப் போராட்டபாதையில் பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியது.

தமிழீழ தேசியத் தலைவரால் ஆழமாக நேசித்த ஒரு விடுதலை வீரனாக அன்ரன் பாலசிங்கம் காணப்பட்டார்.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் தொடக்காலத்தில் இருந்து செயற்பட்ட பாலா அண்ணா விடுதலை இயக்கத்தின் பிதாவாக காணப்பட்டார்.

தமிழீழ தேசியத் தலைவருக்கும் விடுதலைப் போராளிகளுக்கும் உலக போராட்ட வரலாறுகளை எடுத்துக் கூறி பல்வேறு நாடுகளின் அரசியலாளர்களின் தொடர்புகளை ஏற்படுத்தி அதனுடாக விடுதலைக்கான உழைப்பை மேற்கொண்டதில் தேசத்தின்குரல் முதன்மையானவர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தனது துணைவியினையும் இணைத்துக் கொண்ட ஒரு மூத்த அரசியல் போராளியாக, ஒரு மதியுரைஞராக, தத்துவ ஆசிரியராக, தமிழீழ தேசியத் தலைவருக்கு அருகில் இருந்து விடுதலைப் போராட்டத்துக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்துள்ளார்.

பரந்து வாழும் உலகத்தில் தமிழ்மக் கள் பெருமை கொள்ளும் வகையில் அரசியல் உலகிலும் இராஜதந்திர உலகிலும் முடிவில்லா சாதனை புரிந்து தமிழ் மக்களின் சுதந்திர போராட்டத்தை உலக அரங்கில் முன்னிறுத்திய பெரும் போராட்டப் பணிக்காக பாலா அண்ணாவுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் 'தேசத்தின் குரல்' என்ற மாபெரும் மதிப்பை வழங்கி மதிப்பளித்தார்.

தாயகத்தில் போர் உக்கிரம் பெற்ற கால கட்டப் பகுதிகளில் தாயத்தில் இருந்து கொண்டு அரசியல் செயற்பாடுகளை நகர்த்த முடியாத சூலலிலும் உடல் நலத்தைக் கருத்தில்கொண்டும் கடற்புலிகளின் சிறப்பு பாதுகாப்புடன் கடல் வழியாக வெளிநாட்டுக்குச் சென்று உலக நாடுகளுக்குத் தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகளை எடுத்து கூறி, 2002 ஆம் ஆண்டு இலங்கை அரசுடன் ஏற்பட்ட போர்நிறுத் உடன்பாட்டுக்கு முதன்மை வகித்தார்.

இலங்கை அரசின் பல மறைமுக எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் உயில் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் விடுதலைப் பற்றுக் கொண்டவனாக அன்று இரணைமடுக் குளத்தில் விமானத்தில் வந்திறங்கி தனது அரசியல் சக்தியை இலங்கை அரசுக்குப் பாலா அண்ணா தெரியப்படுத்தினார்.

அதனைத் தொடர்ந்து தாய்லாந்து தொடக்கம் ஜெனிவா வரையான பல சுற்றுப் பேச்சுகளில் பங்கெடுத்து தமிழ் மக்களின் அரசியல் வேட்கையை உலகுக்கு எடுத்துக்கூறி இலங்கை அரசுடன் பேச்சுக்களில் ஈடுபட்டு பிரிகேடியர் சு.ப.தமிழ்செல்வனைத் தனக்கு அடுத்த அரசியல் செயற்பாட்டாளனாக வளர்த்தெடுத்த பெருமை அன்ரன் பாலசிங்கத்தைச் சாரும்.

தாயக மண்ணில் பல கல்விக் கூடங்களையும் அரசியல் நிர்வாக அலகுகளின் அலுவலங்களையும் திறந்து வைத்தும் பல போராளிகளுக்கு அரசியல் வகுப்புக்களையும் அவர் கற்பித்தார்.

இலங்கை அரசு போர்நிறுத்த மீறல்களை மேற்கொண்டு தமிழர் தாயகப் பரப்பில் அத்துமீறிய போர் நடவடிக்கைகளை மேற்கொண்ட கால கட்டப்பகுதியான 2006ஆம் ஆண்டு காலகடத்தில் உடல் உபாதையால் பாதிப்புற்ற அன்ரன் பாலசிங்கம் 2006ஆம் ஆண்டு டிசம்பர் 14ஆம் திகதி தமிழ் மக்களை விட்டுப் பிரிந்து சென்றார்.

## தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து தௌபீக் எம்.பியைத் தூக்கியது மு.கா.

### வரவு – செலவுத் திட்டத்தை ஆதரித்ததால் வந்த வினை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் நீக்கப்பட்டுள்ளார்.

2022 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிப் பதில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம் எடுத்திருந்தது. எனினும், கட்சித் தலைவர் ரவூப் ஹக் கீமைத் தவிர ஏனைய நான்கு எம்.பிக் களும் கட்சி முடிவுக்கு எதிராகச் செயற்பட்டு பாதீட்டை ஆதரித்தனர்.

இதையடுத்து அவர்களைக் கட்சியிலிருந்து இடைநிறுத்து வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து தௌபீக் நீக்கப்பட்டுள்ளார்.

அவர் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுகின்றார்.

## சங்கானையில் வாள்வெட்டுக்குழு அட்டகாசம்!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானைப் பகுதியிலுள்ள வீடு ஒன்றினுள் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் புகுந்த வாள்வெட்டுக் குழு அங்கு பெரும் அட்டகாசம் செய்துள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் கொண்ட குறித்த குழு, வீட்டின் கதவுகள், ஓட்டோ, மீன் தொட்டி, தண்ணீர்க் குழாய், கதிரைகள் மற்றும் வேலித் தகரங்கள் என்பவற்றை வாளால் வெட்டி சேதப்படுத்தியுள்ளது.

அந்தக் கும்பல் ஓட்டோக்குத் தீ மூட்டி யுள்ளது. ஓட்டோவை மூடியிருந்த பொலித்தீன் எரிந்து கொண்டிருந்த வேளை வீட்டிலிருந்தவர்கள் அந்தப் பொலித்தீனைக் கீழே இழுத்து விழுத்தினர். இதனால் ஓட்டோ பாரிய பாதிப்புக்கு உள்ளாகவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கடற்படையினரால் உயிர்காப்பு பயிற்சி

(இ.கலையமுதன்)

இலங்கைக் கடற்படையினரால் யாழ்ப்பா ணத்திலுள்ள இளைஞர்களுக்கு உயிர்காப்பு பயிற்சிப் பாடநெறி அண்மையில் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம், காரைநகரில் அமைந்துள்ள எலார கடற்படை முகாமில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 16 இளைஞர்கள் அடங்கிய குழுவொன்று கலந்து கொண்டது எனத் கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடற்படைசமூகப்பொறுப்புணர்வுமுயற்சியின் ஒரு பகுதியாக, கடற்படை யின் வடக்கு கடற்படைக் கட்டளையகம் 2021/01 மற்றும் 2021/02 ஆம் ஆண்டுக்கான லைவ் வெண்கலப் பதக்கப் பயிற்சியை நடத்தியது.

மூன்று வார கால உயிர்காப்புப் பயிற்சியில் கலந்துகொண்டு பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்களை வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் வடக்கு கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் பிரியந்த பெரேரா ஆகியோர் வழங்கி வைத்தனர்.

கடற்படையின் விரைவு மீட்பு மற்றும் நிவாரணப் பிரிவின் உதவியுடன் இலங்கையின் உயிர்காப்பு மற்றும் நார்த் விண்ட் திட்டங்களுடன் இணைந்து கடற்படை இந்த உயிர்காப்புப் பாடத்திட்டத்தை ஏற்பாடு செய்தது.

பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் இந்த நிகழ்வு, சுகாதார வழிகாட்டுதலுக்கமைய இடம்பெற்றது என கடற்படை மேலும் தெரிவித்துள்ளது.